புத்தாண்டு சிறப்பிதழ்
Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] சாற்ப்பானர்:- பிலவ ஞூ பங்குனி மீ ௩௧உ வெள்ளிக்கிழமை (13 April 1962) [இல-உ]

# இருமருங்கும் திருவிளங்கும்

## பெருங் கோபுரங்கள்

## பொருந்திய பூர்வீகப்புனித ஆலயம்

## மருதடியில் வரமருவி மக்களை மகிழ்விக்கும் விநாயகர்

கிழக்கு நோக்கிக் கிருபையருளி வந்த பெருமான் இருந்தாற்போல மேற்கு முகமாய் விளங்கிய அற்புதம் பொருந்திய ஆலயம் ஒன்று உண்டு புறமதத்தவர்களின் படையெடுப்பைக் கண்டிக்கும் முறையிலே தோன்றிய இந்த அதிசய மக்கள் மனத்தில் மாயா தோற்றம் மாற்றத்தை வருவிக்கவொண்ணுது தடுப்பதற்கு அருளப்பெற்ற ஒரு வரம்போன்று பூர்வீகப்புகழ் வாய்ந்த இப்புண்ணிய நிலையம் யாழ்நாட்டில் நடுவண் தமிழகத்தின் இதய கமலத்தில் எழிலுடன் அமைந்திருக்கின்றது. குளமும் கூபமும் வளம்மிகு வயல்களும் மும்மருங்கும் பொலிந்து குளிர்மையும் எழிலும் அளிக்க அருநிழல், அருளும் மருத மரங்கள் மத்தியில் 'திருவுங் கல்வியும் சீருந் தழைக்கவும் கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும் பருவமாய்நமதுள்ளம் பழுக்கவும்' கோயில் கொண்டனர் பெருகுமாளத்துப் பிள்ளையார்.

'தனதடி வழிபடு மவரிடர் கடிகணபதி' எழுந்தருளியிருக்கும் மருதடியைப் பற்றி உரைசெயுங் கருமங் கைகூட அப் பெருமானைக் காதலாற் கைகூப்பிச் செஞ்சொற் பெருவாக்குப் பெற வேண்டிக்கொண்டு இவற்றை எழுதுவாம்.


'ஒருமையா லுணருவோருணர்வினுக் குணர்வதாம பெருமையார் பிள்ளையார் மாணியம்பதியில்மகிழ்வுற்று மருதடியில் எழுந்தருளி வெவ்வினையை வேரகற்றக் கருணை பொழிகின்ற காட்சியே காட்சி, உள்ளக் கருத்தில் பிள்ளையைப் பேணிவரின் இந்தக் கண்கொள்ளாக் காட்சி தோற்றும். அந்த அருள் பெறுவோருக்கு எந்தவித இன்னலும் எய்தாது.

எப்போதகத்தும் நினைவார்க்
கிடரில்லைக்
கைப்போ தகத்தின் கழல்.

பிரணவப் பொருளாய் விளங்கும் விநாயகப் பெருமான் பல மூர்த்திகளாய் பத்தர்களுக்கு அருள்புரிந்த வரலாறு புராணங்களிற் பரவியிருக்கின்றது.

பழமை வாய்ந்த மருதடிக் கோயிலின் புதுமைக்கு வழி காட்டியவர்கள் புறமதத்தவர்கள். போர்த்துக்கேயர் ஈழத்துட் புகுந்த நாட்டொடங்கி சைவமக்களைக் கைப்பற்ற அரச ஆதிக்கமும், அதிகாரமும் ஒருபுறமாகவும் நவநாகரிகத் தூண்டுதல் மறுபுறமாகவும் சூழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. ஒல்லாந்தர் காலத்தில் மருதடிக் கோயிலுக்கு நேர் கிழக்காக ஒரு கிறிஸ்தவ நிலையம் நிறுவப்பட்டது. இச்செய்கை இறுமாப்பினாலும் அறிவுக் குறைவாலும் புறமதத்துக்கு மக்களைச் சதிசெய்து இழுக்கும் சூழ்ச்சியாலும் நடைபெற்றதாகையால் மருதடி விநாயகர் மக்கள் மனத்தில் உண்டான நிலை மாறப் பெருங்கருணை கொண்டு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)




மானிநகர் மன்னு மருதடியில் வைகின்ற
வானினுயர் வேழமுக மாமணியே — தேனினறும்
ஞானமத ஐங்கரவி நாயகனே தெய்வவுரு
வானதமிழ் ஆற்றல் அருள்.

### நற் சிந்தனை

ஆராய்ந்து நற்கருமம்
ஆற்று மியல்பினர்
ஊரார்க்கு நல்ல உறவு

உ

தேனமர் பொழில்கொள் ஆலைவிளை செந்நெல்துன்னி
வளர்செய பொன் எங்கும்நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரைவந்து
நலியாதவண்ணம் உரைசெய்
ஆனசொன்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

## அன்பே சமயத்தின் உயிர் நிலை

### பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்

சமய அபிவிருத்திக்கான பல முயற்சிகள் இன்று நடைபெறுகின்றன. இளைஞர்களும் பெரியவர்களும் இதிலே போதிய ஆர்வங் காட்டுகின்றார்கள். இது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாயினும், சமய அபிவிருத்தியானது, சாஸ்திரப் படிப்பு, ஞான நோக்கில்லாத வெற்றுக்கிரியைகள், ஆடம்பரமாகச் செய்யப்படும் பூசை திருவிழாக்கள் என்ற இவற்றுடன் நின்றுவிடுமானல் அவ்வபிவிருத்தி அர்த்தமற்ற தாகிவிடும்.

உலகிற் பெரும்பாலான மக்கள் இந்த அர்த்தமற்ற காரியங்களையே சமய வாழ்வின் முக்கிய அமசங்கள என்று கருதுகின்றார்கள்!

சமயவாழ்வு என்பது அன்பு நெறியே என மகான்கள் உணர்த்திச் சென்றார்கள். அன்பை இடைவிடாது பயிற்சி செய்து, பரிபூரண அன்பு நிலை எனப்படும் அருள நிலையை அடைவதே, ஒருவர் தம்மையும் பிறரையும் உயர்த்துவதற்கும், உலகத் துன்பங்களினின்று விடுதலை பெற்றுக் கடவுளையடைவதற்கும் உரிய தனி வழியாகும். நாம் கற்கும் சாஸ்திரங்களாலும், செய்யும் கிரியைகளாலும் அறிவு உதயமாகி, அவ்வறிவு அன்புப்பயிற்சிக்குக் கருவியாய் அமைய வேண்டும். சாஸ்திர அறிவுகள், கிரியைகள் இலட்சியங்கள் அல்ல.

"அறிவினலாகுவதுண்டோ
பிறிதின் நோய்
தந்நோய்போற் போற்றாக்கடை"

என்பது திருக்குறள். அன்பைப் பயிற்சிசெய்தல் என்பதை இன்னெருவகையாற் கூறினல் ஆணவத்தை யறுப்பது எனலாம். நான் எனது என்னும் அற்ப உணர்வுகளைக் களைந்து ஆன்மா மலர்ச்சியெய்திப் பிறவுயிர்களுடன் இணங்கி, அவ்வுயிர்களுக்கும் தனக்கும் உயிரோட்டமாயிருக்கின்ற இறைவனுடன் ஒன்றுபடுகலை அன்புப்பயிற்சியின் சிகரமாகும். அப்பயிற்சியொன்றே எல்லா அறங்களையும், நன்மைகளையும் தரும். அதற்காகவே பிரபஞ்சவாழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில், "நின்றன் வார்கழற்கன் பெனக்கு, நிரந்தரமாயரு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

### அரியாலை ஸ்ரீ ஞானவயிரவர் கோயில் வருடப்பிறப்பு உற்சவம்

14-4-62 சனிக்கிழமை ஸ்ரீ ஞானவயிரவர் கோவிலில பகல் அபிஷேக ஆராதனையும், இரவு அலங்கார உற்சவமும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

இவ்விழாவில் பிரபல வித்துவான்கள் பலரின் மேளக்கச்சேரிகளும் நடைபெற இருக்கின்றன.

## வேலணை திருக்குறள் மாநாட்டில் கவிஞர் சாலைஇளந்திரையன்

தமிழ்மறைக் கழகத்தின் பத்தாவது திருக்குறள் மாநாடு வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின ஆதரவில வேலணையில் மேதிங்கள் 18, 19, 20-ம நாள்களில் சிறப்பாக நடைபெறும்.

தெல்லிமாநகர் (டெல்கி) பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் சாலைஇளந்திரையன் எம். ஏ., எம். லிற் அவர்களும் அவர்களுடைய மனைவியார் திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன் எம.ஏ., அவர்களும திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# புரட்சிக் கவிகண்ட புதுமைப் பெண்களே!

## அவர் போற்றிய புனிதப் பண்புகளை மறந்ததேன்?

[ செல்வி புஷ்பா செல்வநாயகம் B. Se. ]

நாம் ஒவ்வொருவரும் பிறவிக் கடலைக் கடக்க, பிறவி எடுத்த தன் பயனை அடைய, இறைவனது அருள் என்ற ஒளியைப்பெற அவனது திருவடி நிழலைச் சேர, நீங்காத எல்லையில்லாப் பேரின்ப உலகை அடைய சமய வாழ்வு இன்றியமையாதது. இதை உணர்ந்து தானோ என்னவோ நமது அரசாங்கம்கூட தற்போது சமய பாடம் கட்டாயமாகக் கற்க வேண்டும். பாடசாலை பாடகுசிகையில் முக்கிய இடத்தைப்பெறவேண்டும் என்ற ஒரு சட்டத்தையும் கொண்டு வந்துள்ளது. நாகரீகமும் விஞ்ஞானமும் மிகவும் முன்னேற்றமடைந்துள்ள இன்று, "கடவுள் என்றொருவர் உண்டா? அப்படி ஒருவர் இல்லையே. மனிதனே எல்லாம். அவனே பரம்பொருள். உலகை ஆள ஏகாதிபத்தியம் அவனுக்குள்ள ஒரு தனி உரிமை" என்று நாஸ்திகம் பேசும் விஞ்ஞானிகளையும் கல்வியறிவு படைத்தவர்களையும் காண்கிறோம். உலகின் பல பாகங்களிலிருந்தும் இத்தகையோரின் குரல்கள நமக்குக் கேட்கின்றன. இதற்கு இவர்கள் அறியாமையா அல்லது குன்யமான சமய அறிவா அல்லது இவர்களைப் பிடித்தாட்டும் அகங்கார மமகாரமா காரணம் என்பது புலனாகவில்லை, ஆளப் பிறந்தவர்கள் என்று மமதை கொள்ளும் ஆண்கள் தான் இந்த நிலையில் இருக்கிறார்களென்றால் கண்ணகி, காக்கை பாடினி, ஔவை முதலிய அறம்வளர்த்த பெண் தெய்வங்கள் வழியில் தோன்றிய நம பெண்களோ இதைவிடக் கேவலமான நிலையில் இன்று இருக்கிறார்கள். உண்பதையும், உடுப்பதையும், உல்லாசமாகப் பேசி மகிழ்ந்து ஊரெல்லாம் பவனிவந்து, பல கேளிக்கைகளில் மனதைச் செலுத்தி மாயமான, பொய்மையான உலகஇன்பமே மேலென மதித்துத் தமது பொன்னான காலத்தை வீணே விரயமாக்குகிறார்கள். ஆனால் ஒரு காலத்தில் கற்புக்கனல் ஒளிர அப் பண்பைக் கவசமாகப் பூண்டு பெண்மைக்கு அழியாத பெருமையையும் புகழையும் ஈட்டித் தந்த பதுமாவதி, அருந்ததி, சாவித்திரி போன்ற மங்கையர் திலகங்கள் இந்துக்களிடையே தோன்றி வாழ்ந்தார்கள் என்பதற்கு புராணங்கள் சான்று பகர்கின்றன.

"தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற வள்ளுவர் வாக்கியத்தையும் நிரூபித்துக் காட்டிப் புராணம் என்னும் பொன்னேட்டில் தங்கள் அழியாத வரலாறுகளை ஆழப் பொறித்துவிட்டனர் இக்கற்புடைப் பெண்கள். மற்றவர் சாமான்யமாகச் சாதிக்க முடியாத சாதனைகளையும் ஆற்றல்களையும் இவர்கள் சமயவாழ்வு மூலம்பெற்றிருந்தனர். அன்று கற்பின் திண்மையால் அறவாழ்வு வாழ்ந்த பெண்கள் மரபிலே தோன்றிய நம் தற்காலப் பெண்களோ தெய்வ வழிபாட்டில் மனதைச் செலுத்தாத காரணத்தால் வலுவிழந்து வெறும் உல்லாசப் பாவைகளென, பதுமைகளெனத் திகழ்கின்றனர். இந்தநிலை

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

### கலைமகள் சித்தாந்தம் பத்திரிகை ஆசிரியர்கள் வருகை

—0—

கொழும்பு விவேகானந்த சபை ஆதரவில் சித்திரை மாதம் 7, 8, 9-ம் தேதிகளில் (20, 21, 22-4-62) திருமுறை விழா கொண்டாடப்பட இருக்கின்றது. மூன்று நாட்களும் காலை, மாலை இரு நேரங்களிலும் பூசை பிரார்த்தனை திருமுறை ஓதுதல், விரிவுரைகள் நடைபெறும். விழாவில் கலந்து விரிவுரைகள் நிகழ்த்துவதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார், சென்னை கலைமகள் ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜெகந்நாதன், சென்னை சித்தாந்தம் ஆசிரியர் புலவர் ந ரா. முருகவேள், புறக்கோட்டை சகோதரி சிவ-பிருந்தாதேவி அம்மையார் ஆகியோர் வரவழைக்கப்படுகின்றனர், ஈழநாட்டுப் பெரியார்கள், வழக்கறிஞர் வே. நாகலிங்கம் யே,பி. முதலியார் செ. சின்னத்தம்பி, தேசிகமணி கா. அருணசல ஆசிரியர், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் ஆகியோரும விரிவுரையாற்றுவார்கள். கதாப் பிரசங்கம் திருமுறை ஓதுதல் முதலியனவும் நடைபெறும்.

### கரம்பன் சைவமகா சபையின் தெய்வப்பணி

—:0:—

### ஒரேநாவில் சிவதீட்சை பெற்றனர் தொண்ணூற்றொன்பது பிள்ளைகள்

—0—

கரம்பன் சைவமகாசபை ஆதரவில், கரம்பன் மேற்கு முருகமூர்த்தி கோவில் மண்டபத்தில் நயினாதீவு நாகபூஷணியம்மன் தேவஸ்தானம் சிவ. ஸ்ரீ. நா. ஜ. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் 99 பேர்களுக்குச் சிவதீட்சை அளிக்கப்பட்டது. அவ்விழாவில் சபைச் செயலாளர் திரு. ச. சுப்பையா அவர்கள் பேசுகையில் பண்டைய கால மக்களின் வாழ்க்கை நெறிகளை நாம் உணர்ந்து அதன் வழி நடக்கவேண்டும். சமய நெறி அற்ற வாழ்க்கை நிலையில் நிற்காது எனவும், மக்கள் இன்பமாக வாழ வேண்டுமானல் சமயப்பண்பாட்டுடன் பண்டைய மக்கள் காட்டிய சமய சாஸ்திரங்களைக் கற்று அதனை நடைமுறையில் நடாத்திவர வேண்டும்எனவும் இந்நோக்கத்தோடு எமது சபை சமயதீட்சை என்ற பணி

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# வாழ்க்கையில்வெற்றிக்குவழிவகுப்பது ஆசாரம்

ஆசாரம் என்பது ஒழுக்கம் சுத்தம என்பவற்றைக் குறிக்கும். ஆசாரம் ஒருவனுக்குச் சிறப்பையளிக்கும், ஆகையினால் அவன் அதனைத் தன் உயிரினும் மேலாக மதிக்க வேண்டும். ஆசாரமுடையவன் தன்னை நல்வழியில் செலுத்துவதோடு பிறரையும் நல்வழிப்படுத்துவான், ஆசாரமில்லாதவனைப் பிறர் மதிக்கமாட்டார்கள்.

ஆசாரம் இருவகையாக அநுட்டிக்கப்படல் வேண்டும். ஒன்று புற ஆசாரம், மற்றையது அக ஆசாரம். ஒருவன் முதலில் தான் வசிக்கும் மனையைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தன்னுடைய உடம்பையும் அணியும் உடைகளையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இவ்விதமாக அவற்றைத் தூய்மையாக வைத்திருப்பானயின் அவனுக்குத் தேகாரோக்கியம் கிடைக்கும். கடவுள் வழிபாட்டுக்கும் இப்புற ஆசாரம் துணைபுரியும். இக்காரணத்துக்காகவே ஆலய வழிபாட்டுக்குச் செல்லும்பொழுது ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்துகொள்ள வேண்டும் என்று சைவ சாத்திரங்கள் கூறுகின்றன,

ஒருவன் தான் உண்ணும் உணவை ஆசாரமாக ஆக்கி அதனை ஆசாரமான முறையில் அருந்தவேண்டும். மனிதனிடத்தில் மூவிதகுணங்கள் காணப்படுகின்றன. அவை தாமதம், இராசதம், சாத்துவிகம் என்பனவாம். உணவுப் பதார்த்தங்கள் மனிதனிடத்தில் இம்மூவிதகுணங்களையும் விருத்திபண்ணும் தன்மை வாய்ந்தன, மாமிசம், மதுபானம் முதலியன அவனிடத்தில் தாமதகுணத்தையும் இராசதகுணத்தையும் விருத்திசெய்யும் இயல்புடையன.

தாவரபோசனம் பால் தயிர் பழ வர்க்கங்கள் அவனிடத்தில் சாத்துவிக குணத்தை உண்டாக்கும் இயல்புடையன. மனிதனுக்கு இம்மையில் இன்பத்தையும் ஆரோக்கியத்தையும் மறுமையில் வீட்டின்பத்தையும் தரும் தன்மைவாய்ந்தது சாத்துவிக குணமே. ஆகையினால் அக்குணத்தை விருத்திபண்ணும் உணவையேயருந்தவேண்டும். அக்காரணம்பற்றியே கொல்லாமை, புலாலுண்ணாமை ஆகிய விரதங்களை ஒவ்வொரு சைவனும் அநுட்டிக்க வேண்டுமென்று சைவசாத்திரங்கள் கூறுகின்றன.

"கொல்லா விரதம் இக்குவலய மெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே"

எனத் தாயுமான சுவாமிகள் கூறிய திருவாக்கை ஒவ்வொரு சைவனும் நன்கு சிந்தித்து அதனைக் கைக்கொள்ள வேண்டும், புலால் உண்பவனிடத்தில் அருள் இராது. தன்னூன்பெருக்கதற்குத் தான் பிறிதூனுண்பான் எங்ஙனமாளும் அருள்

ஒருவன் தன்னுடைய உடம்பினைப் பருக்கச் செய்தற்குப் பிறிதொரு பிராணியைக் கொன்று அதன் ஊனை உண்பானயின் அவனிடத்தில் அருள் உண்டாகாது எனத் திருவள்ளுவநாயனா கூறியிருக்கின்றமையை நாம் சிந்திக்க வேண்டும். நற்சிந்தனை, ஈசுரபக்தி, பொறை, வாய்மை நமது உள்ளத்தில் வளருவதை நாம் விரும்பினல், நாம் கொல்லாமை புலாலுண்ணாமையாகிய விரதங்களை அநுட்டிக்க வேண்டும். மது ஒருவனுடைய அறிவை மயக்கும் இயல்புடையது.

'கள்ளினு மௌது கொல் கருத்தழிப்பதே' எனக் கச்சியப்ப சிவாசாரியர் கூறினமை இக்கருத்தை விளக்குகின்றது.

உணவு அருந்தும்பொழுது ஆசாரமாகவிருக்க வேண்டும். உண்ணும் பாத்திரங்களை உச்சிட்டம்பண்ணி உணவை அருந்துவது சைவாசாரத்துக்கு ஒவ்வாது. உணவையருந்தத் தொடங்குமுன் அதனைச் சிவார்ப்பணம் செய்து அருந்த வேண்டும், அப்பொழுது நாம் உட்கொள்ளும் உணவு வயிற்றுட் சென்று நல்லிரத்தமாகப் பரிணமித்து எங்களுக்கு நற்சிந்தனையையும் கடவுள் பக்தியையும் உண்டாக்கும். உணவு அருந்தும்பொழுது வீண்வார்த்தை பேசக்கூடாது. உணவைக் இகழ்ந்து சிந்தக்கூடாது. அதுபோல அகஆசாரம் தெய்வீக வாழ்வுக்கு இன்றியமையாதது. மனத்திலே கோபம், அழுக்காறு, வஞ்சனை, காமம், பொய் முதலிய தீயகுணங்கள் இல்லாதிருத்தலே அக ஆசாரமாகும். பொய்யினர் தம் சிந்தையில் ஈசன் நில்லான், 'பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன் அவர்தமை நாணியே' எனத் திருநாவுக்கரசுநாயனார் கூறினமையை நோக்குவோமாக. மனத்திலே பொய்யை உடையவர்களுடைய பூசைக்கு அஞ்சிச் சிவபெருமான் தூரத்திலே நிற்பாரென அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்.

இவ்விதமாக புறஆசாரத்துடனும் அகச் சுத்தத்துடனும் ஆசாரமாக வாழ்பவர் எய்தும் நன்மைகளைப் பின்வரும் செய்யுள் கூறுகின்றது.

"பிறப்பு நெடுவாழ்க்கை
செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம்
கல்வி நோயின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும்
எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்."

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

திரு. மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.



# அன்றைய இசை நாடகம் ஒன்று

திரு வை. முத்துக்குமாரசுவாமி B. A.

தமயந்தி விலாசம் என்னும் நாடகம் இற்றைக்கு எழுபத்தைந்து ஆண்டுக்ளுக்கு முன்னர், மானிப்பாய், அளவெட்டி என்னும் இரு ஊர்களிலும் நாட்டுக் கூத்தாக நடிக்கப்பட்டு வந்தது இந்த நாடகத்தை எழுதியவர் ஆனைக்கோட்டை தனியாண்மை முதலியார் எனப்பட்டவர் இவர் கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்களின் பேரன். தமயந்தி விலாசம் என்னும் நாடகம் அச்சேருத ஓர் நூல். அக் காலத்தில் நாடகங்கள் பாட்டுக்களாக ஏடுகளிலும் கொப்பிகளிலும் எழுதப்பட்டுப் பரிமாறப்பட்டன. இந்த நாடகத்தில் உள்ள பாட்டொன்றை எனது தந்தையார் யாழ்ப்பாணம் நாவலர் கோட்டம் க.வைத்திலிங்கம் அவர்கள் ஞாபகத்தில் இருந்து கூறக்கேட்டுக் குறித்து வைத்திருந்ததைக் கலைப்புலவர் எமக்குத் தந்தார். அது பின்வருமாறு:-

தமயந்தி நளனுக்குக் கூறுதல்:—

இந்திரர் ஆதி யானோர்
  இமயவர் ஆத லாலென்
சிந்தையில் விருப்பந் தன்னைத்
  தெரிந்திரா தவர்க ளல்ல
புந்தியில் அவர்போற் றூது
  போவென விருந்த நாங்கள்
வந்தனஞ் செய்தாள் உங்கள்
  மானௌனச் சொல்லு ஞமன்.

பின்னர் நான் நாவலர் கோட்டத்துக்கு எந் தந்தையாரிடம் சென்று வேறு பாட்டுக்களைக் கூறும் படி கேட்டேன். அவருக்கு வயது 88 தான் சிறுவனாக இருக்கும் பொழுது 1887 அளவில் சண்டிலுப்பாயில் இருந்து மானிப்பாய்க்கும் அளவெட்டிக்கும் சென்று இந்த நாடகத்தைப் பார்த்ததாகவும். தமது இல்லத்துக்குச் சமீபத்திலே உள்ள சண்டிலிப்பாய்க் கந்தப்பிள்ளை குட்டியின் வீட்டுக்கு தனியாண்மை முதலியாரும் ஆசைப்பிள்ளை என்பவரோடு அங்கு வந்ததைக் கண்டதாகவும், மேலும் அவரிடம் இருந்து, அக்கூத்துக்களை ஆண்களும் பெண்களும் பார்த்து வந்தனரா? பெண்கள் நாயகியாக நடித்தார்களா? அக்காலத்தில் கூத்துக் கொட்டகைகளில் கதிரைகள் இருந்தனவா என்று விசாரித்தேன். கூத்துகள் மேடைகளில் நடிக்கப்பட்டன; ஆண்களே பெண் வேடம் தாங்கினார்கள்; பெண்களுக்குப் பிரத்தியேக ஆசனம (பாய்) இருந்தது. யாவரும் பாயில் உட்கார்ந்து கூத்துக்களை இரசித்தார்கள் என்று கூறினார்.

பின் கலைப்புலவருக்குக் கூறிய பாட்டை என் தந்தையார் வாயிலாகக் கேட்டேன். மேலும் அவர் இரு பாட்டுக்களைக் கூறினார். அவை பின்வருவன:-

தமயந்தி தோழிக்குச் சொன்னது:-

"சுந்தரஞ்சேர் என்னுடைசத்
  தோழியனே அச்சமின்றி
வந்தெனக்கு முன்நடக்கும்
  மாதிரியைப் பாரடி நீ
இந்த அன்னம் போல்உலகில்
  எங்கணும்யான் கண்டதில்லை
எந்தவித மும்பிடித்தே
  எனக்கதனைத் தருவாய் நீ
தூதுசென்று போன அன்னம்
  துய்யர்தம யந்தியெனும்
மாதுதனைக் கண்டதுவோ
  வானுலகம் புக்கதுவோ
எது மறியேன் ஐயனே
  இங்கிவரைக் காண்கிலனே"

இதில் நாலாம்வரி அவர் ஞாபகத்தில் வரவில்லை இந் நாடகத்துக்குத் தனியாண்மை முதலியாரே அண்ணாவியாக இருந்தார் என்றும், தமயந்தி விலாசத்தில் ஏறக்குறைய அறுபது பாட்டுக்கள் இருந்தன என்றும், தாம் எல்லாவற்றையும் ஒரு கொப்பியில் எழுதி வைத்திருந்தார் என்றும், அதை யாரோ ஓர் இனத்தவரிடம கொடுத்தார் என்றும், பின்னர் அவர் கையில் அது அகப்படவில்லை என்றும் என் தந்தை கூறினார்.

—

இன்னலின் வருகைகள் நீ இறைவன்பால் வைத்திருக்கும் தன்னம்பிக்கையின் ஆழத்தைச் சோதிக்கும நிகழ்ச்சிகளாகும.

— சுவமி சிவானந்தா.

கொழும்பில்
இந்துசாதனம்
விற்பனையாளர் :
திரு. S. KR. M. மணி
92 புதிய சோனகதெரு,
கொழும்பு-12.

இந்துசாதனம்
சந்தா விபரம்:-
ஆண்டு சந்தா ரூ 9-00
கல்வி நிலையங்களுக்கு 4-50
அரை ஆண்டு சந்தா 4-50
'இந்துசாதனம்'
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

சிறுகதை

# பிள்ளைப் பலி

ச. வே. பஞ்சாட்சரம்

செம்மை நிறம் சுடர் விடும் அந்திவானம். அந்தப் பின்னணியோடு கம்பீரமாக எழுந்து நிற்கும் கரிய கோபுரம். அதன் பக்கச் சுவரில் மாலை இளந்தென்றலில் மெல்ல அசைந்து நிற்கும் சிறிய அரசங் கன்று. இந்தக் காட்சியில் நிறைந்து பொலிந்து கிடந்த அந்த அற்புத அழகு சற்று நேரம் அங்கே நின்று போகவேண்டும் என்னும் ஆவலை என் மனத்தில் விதைத்துவிட்டது. அங்கிருந்த கல்லொன்றில் மெல்லஉட்கார்ந்துகொண்டே தெய்வ தரிசனத்தற்காக அந்த என்னை அழைத்து வந்திருந்த அந்த ஊர் நண்பனையும் கையைப் பிடித்து அருகில் அமரச் செய்தேன்,

"இங்கே எவ்வளவு நேரம் தங்கினுலும்அலுக்காதுபோல இருககிறது, ஆகா, எவ்வளவு இன்பமும் மனச்சாந்தியும்" ஒருவித அபூர்வ சக்தியால் கட்டுண்டிருந்த எனது வாயிலிருந்து இந்த வார்த்தைகள் என்னையறியாமல உதிர்ந்தன.

"இப்பொழுதுதான் இந்தத் தெய்வீகச்சூழ்நிலையும் பொலிவும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பக்கம் வந்திருந்தாயானுல் முழு மாருன சூழ்நிலையில் மனம வெதும்பியிருப்பாய்!" நண்பன் புதிர் போட்டான்.

"அதெப்படி?" ஆவலோடு நான் வினு எழுப்பினேன்.

"அப்பொழுதெல்லாம் இங்கே இதோ இந்த மரநிழலில் வேள்வியென்ற பெயரில ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான ஆடு கோழிகளை ஈன இரக்கமின்றித் தறித்துக் கொட்டிக் கொடுமை புரிந்தார்கள்".

"அப்படியா? எப்படி அந்தக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி விழுந்தது?" எனக்கு ஆவல் அதிகரித்துவிட்டது.

"அது ஒரு பெரிய கதை" என்று சொல்லிவிட்டு மூச்சை நீளமாக இழுத்துவிட்டுக் கொண்டான் நண்பன், நான் கதையைக் கேட்கத் தயாரானேன்,

x x x

இந்தக் கோயிலைக் கட்டுவித்தது இன்று மணியகாரனாக இருப்பவரின் தந்தை. அவரது காலத்தில இந்த ஆட்டுப்பலியோ ஆடம்பரத்திருவிழாக்களோ இங்கு நடைபெற்றதில்லை நேர்மையாக உழைத்து தமது ஆசைகளையும் இச்சைகளையும் தியாகஞ்செய்து எவ்வளவோ இடர்ப்பட்டு இதைக் கட்டி முடித்ததுபோலவே மூன்றுகாலப் பூசைகளையும் ஊரில் திரிந்துபடி அரிசி தண்டியும் செல்வந்தர்களின் வீட்டு வாசற்படியில் காத்திருந்து பணம் வாங்கியும் ஒழுங்காக நடத்திவந்தார். ஆனுல் அவர் இறந்தபின் மகன் கைக்கு நிர்வாகம் மாறியது. கோயில் நடைமுறைகள் சீரழியத் தொடங்கின. யாரோ புல்லர்களின் தூர்ப் போதனையின் பேரில் ஆட்டுப்பலி இந்தப் புனித கோயிலில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வழியில் கிடைத்த வரும்படியில் அடக்கமும அருட்பொலிவும் நிறைந்த பூசைகள் அபிடேகங்கள் போய் ஆடம்பரமும் கேளிக்கைகளும்நிறைந்த திருவிழாக்கள் தொடங்கின. தெய்வம் உறையும் புனித தலம் என்பதற்குப் பதில் போலித்தனமும் போக்கிரித்தனங்களும் மலிந்த கயமைக் குகையாக மாறிவிட்டது இந்தக்கோயில்!

ஊரிலுள்ள நல்லவர்கள் மனம் நொந்தனர். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க அவர்களால் முடியவில்லை. இந்த மணியகாரனைச் சந்தித்து "இதெல்லாம் அடாத செயல்கள். சமூகத்தில் நெறியையும் நீதியையும் போதிக்க உதவவேண்டிய கோயில் தீய பழக்கங்களையும் மிருக வெறிகளையும் பரப்பி வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இது கூடவே கூடாது" என்று துணிவோடு எடுத்துக் கூறினர். இடித்துரைத்தனர்.

எதற்கும் மணியகாரன் மசியவில்லை!

தொடர்ந்து, ஊரிலுள்ளவர்களிடம வீடுவீடாகச் சென்று பெற்றபிள்ளையைப்போல அருமையாக ஊட்டி வளர்க்கும ஆடுகோழிகளை, படைத்தவன் சந்நிதியில் கொண்டுவந்து கதறக் கதற வெட்டிக் கொல்லும் கொடுமையை வினயமாக எடுத்துரைத்து அதை நிறுத்திவிடும்படி கேட்டுப் பார்த்தார்கள். அந்த இறுதி வழியும் எதிர்பார்த்தளவு பலன் தராமல் போகவே இனி என்ன செய்யலாம் என்று அமைதியாயினர்,

அப்பொழுது மணியகாரனுக்குத் திருமணமாகி ஆண்டுகள் பல சென்றிருந்தன. ஆனுல் பிள்ளைகள் பிறக்கவில்லை கோயில்களில் ஆடுகளை வெட்டிக்கொன்று அவற்றின் இறைச்சியைத் தின்றுவிட்டு, திருவிழாக் காலங்கள் வந்ததும் விரதம் நோற்கும் விந்தையான வழக்கம் அந்த மணியகாரன் தம்பதிகளிடத்திலுமிருந்தது பிள்ளையில்லாக் குறையைப் போக்கவிரதங்கள் கிடந்தார்கள். யாத்திரைகள் போனுர்கள். அன்னதானங்களும் கொடுத்தார்கள்.

மேலும் ஓரிரு ஆண்டுகளில் அவர்கள் விரும்பியபடி ஓர் ஆண் குழந்தைக்கு 'அம்மா அப்பா'வாகினர். ஆனந்தத்தால் கொண்டாடிக் குதூகலித்து அந்தப் பிள்ளைக்கு வேலாயுதனென்று பெயருமிட்டனர். வேலாயுதன் நோய் நொடியின்றி வளர்ந்து

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# நல்லதமிழ் ஆண்டே நீ நலஞ் செய வேண்டும்!

— கமலர் கண்ணன் —

"நீடாழி யுலகத்து நிறையிருளை நீக்கி
  நல்லவள முதவுகின்ற நிறைகதிரின் செல்வன்
வாடாத ஒளிககருணை வழங்கினன்காண்" என்றே
  வாரணக்கு லம்மகிழ்ந்து கட்டியங்கள் கூற,

தாமரைகள் நிமிர்ந்தலர்ந்து சாமரையி ரட்டத்
  தேனினங்க ளித்தினிய தோத்திரங்கள் பாடப்,
பூமரங்கள் புடைமருவு தோரணங்கள் தூக்கப்,
  புதியமணத் தென்றலது பையநகர்ந் தூத,

கோஞ்சுமொழி யஞ்சுகமுங் கோகிலமுங் கூடிக்
  கோதறுமி னியதமிழ்க் கீர்த்தனங்கள் பாட,
அஞ்செழுத்தி னரியபொருள் அபிநயத்து ளாக்கி
  ஆடுமயி லோடுகுளத் தவளைமுழ வதிர,

பவனிவருஞ் சுபகிருதுப் புதியதமிழ் ஆண்டே!
  பரவிடுவம் உனைப்புகழ்ந்து பாடிடுவம் என்றும்
அவனிமிசை அரியவொழுக் காறுகளை யுனைத்தும்
  அடியேங்கட் காக்கிநலஞ் செய்திடுவை யன்றே!

பாலரிசிப் பொங்கலோடு கன்னலுமு யர்ந்த
  பசுமையுள மஞ்சளோடு போற்குடநி றைத்து
நாலுமுயர் தோரணநி ரைத்துவர வேற்றேம்!
  நல்லதமிழ் ஆண்டே!நீ நலஞ்செய்ய வேண்டும்,

**எங்கள் அறிவித்தல்**

—:—

வருடப்பிறப்பை முன்னிட்டு பங்குனி 30உ வெள்ளிதொடங்கி சித்திரை 2உ வரை (13 4-62—16-4-62) யும், பின் சித்திரைப் பூரணை விரதத்தை முன்னிட்டு 19-4-62 வியாழக் கிழமையும் இந்துசாதன அலுவலகமும், சைவப்பிரகாச அச்சியந்திரசாலையும் மூடப்படும். 20-4-62 இந்துசாதனம் தமிழ் ஆங்கில இதழ்களும் வெளிவரமாட்டா.

அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

பிலவ ஹு பங்குனி மீ ௨௯ உ வெள்ளிக்கிழமை


## சுபகிருது சோபனம்

'இறைவன் இன்னருளால எழுபத்து நான்காம் மலரை மலரவைக்கும் இந்துசாதனம் புது ஆண்டு பொலிந்து நலங் கனிய வேண்டும்' என்று திருவருளை முன்னிட்டு வாழ்த்துக்கூறும் தகைமைசான்ற வளர்ச்சியை, வயதால் அறிவும் அனுபவமும் ஆற்றலும் கலந்து பயக்கும் வளத்தால்,செந்தமிழ்உலக அறிஞர்களின் மதிப்பால் அடைந்திருக்கிறதென்பதை நாம் எடுத்தியம்பாமலே யாவரும் அறிவர்.

சுபகிருது தோன்றும் சுபவேளையிலேயே இந்துசாதன எழுபத்துநான்காம் மலரும் எழுகின்றது. சைவ நன்மக்களுக்குத் தொடர்ந்து சமயச் சால்பும் மொழி எழிலும் பொருந்தப் பணியாற்றி வரும் எங்கள் வெளியீடு 'சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகி வந்த நறபயனுமாகி வாள்நுதல் பாகமாகி ... அந்த மோடளவிலாத அண்ணலின் அருள்பெற்றுப் பல்லாண்டோங்கிச் சைவத் தொண்டாற்றச் சுபகிருது நற்சோபனம் சொல்லுகின்றோம்.

'இறைவனே உன்னையல்லால் யாதும்நான் நினைவிலேனே' என்றபடி நின்னையே நினைந்து 'தொண்டனேன் உன்னை அல்லாற் சொல்லுமா சொல்லிலேனே' என்றாங்கு உன்னையே சொல்லும் தொண்டே இந்துசாதனத் தொண்டெனக.

சுபகிருது ஆண்டிலே தூய எண்ணமும் சுவையான சொல்லமைப்பும் தொன்மை தழுவிய சைவ நீதியில் எழுந்த நன்மைப் பணியும் எங்கும் உதிக்க வேண்டும் என்று பரமேசுவரரைப் பணிகின்றோம்.

சோபனமாகச்சுபகிருது துன்பமகற்றி சுகம் ஆக்கும் ஆண்டாக அமைவதற்கு நலல சைவமக்களாக நாம் எல்லோரும் வாழ்ந்து வழிகாட்டுவோமாக.

x x x

# சமயமும் வாழ்வும் பிரிக்க முடியாதவை

பண்டைக்காலத்திலே சமயமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று பிணைந்திருந்தன. இக்காலத்திலே சமயம் வேறு வாழ்க்கை வேறு என்ற எல்லைக்கோட்டை வரைந்தமையால் இன்று எல்லாம் மாறிவிட்டது. சமயம் கீழ் நிலையடையத்துவங்கிவிட்டது. நாம் வாழ்வதற்கு வழி வகுப்பது சமயம். தன்னையே உணர்த்துவது சமயம் இராமகிருஷ்ணர் இறந்த பின்பு அவருடைய பூதவுடலை எரித்த சாம்பலை அவரின் சிறந்த சீடர்கள் பன்னிரண்டு பேரும் வைத்திருக்க விரும்பினார்கள். பற்றற்ற அவர்கள் மனதிலும் இதனால் பொருமை மூண்டது. அவர்கள் இந்தப் பிணக்கைத் தீர்ப்பதற்காக சாரதா அன்னையிடம் சென்றார்கள். "சாறு போய்விட்டது வெறும் சக்கையை அடையவா விரும்புகிறீர்கள்"? என்று அவர் சீடர்களை நோக்கிக் கேட்டார். அவரின் கேள்வியின் பின் ஒருவரும் அந்தச் சாம்பலைத் தொடக்கூட விரும்பவில்லை அதேவிதமாக, சமய வாழ்விலும் நாம் சாறைவிட்டுச் சக்கையைத் தேடக்கூடாது சமயத்திற்கு வெளி அநுட்டானங்களும் வேண்டியதுதான்; ஆனால் அதுமாத்திரம் சமயம் என்று நம்பக் கூடாது. சமய அநுட்டானத்தை விடுப்பதும் தவறு. சமய அநுட்டானமும் தன்னை அறிதலும் ஒன்றிற்கொன்று இன்றியமையாதவை. நெல் முளைப்பதற்கு அரிசியும் தேவை. அதனோடு சேர்ந்த உமியும் தேவை. உமியை நீக்கி விட்டால் அரிசி தனியே முளைக்க மாட்டாது. உமியும் தனியே முளைக்கமாட்டாது. சமயம் அநுட்டானமளவில நிற்கமுடியாது.

"தன்னை உணர்ந்தவன் தலைவனை உணர்ந்தவன்" என்பது ஒரு முதுமொழி. உண்மை ஒளியை உணர்ந்து அந்த உண்மை ஒளி வழி காட்டும் போதுதான் வாழ்க்கை வளர்ச்சியடையும் நாவலரும் கணேசையர் அவர்களும் படிப்புடன் நிற்கவில்லை. உண்மையை உணர்ந்து சமயத்தை வாழ்க்கையில் அநுட்டித்தார்கள். பெரும்பாலும் இக்காலத்தில் வாழ்க்கைக்கும் சமயக்கல்விக்கும் பெருமளவில பேதம் காணப்படுகிறது.

### மனிதருள் மாணிக்கம்

எல்லாச் சமயங்களும் அன்பு என்ற ஒரே வழியையே போதிக்கின்றன. நாம் இதை உணரத் தவறிவிடுகிறோம். இதனாலே பல இன்னல்கள் ஏற்படுகின்றன. மொழி இனம் முதலியவற்றால் ஏற்படும் வேற்றுமைகள் நீங்க வேணடும். "யான், எனது" என் பவற்றின் செருக்கற வேண்டு

ஆத்மஜோதி ஆசிரியர்

**திரு. நா. முத்தையா**

மென்டதே சைவ சித்தாந்தக் கொள்கை. ஆறுமுகநாவலர் தமிழிற்குச் செய்த தொண்டையாம உலகமறியச் செய்ய வேண்டும். கவிதாகூர் உலகப் புகழ் பெற்ற கீதாஞ்சலியைத் தாய் மொழியாகிய வங்காளத்தில் ஆக்கினார். ஆங்கிலத்தில் அது மொழி பெயர்க்கப்பட்ட பினபே அவரின் புகழ் உலகெங்கும் பரவியது. நாமும் சித்தியார் போன்ற சித்தாந்த நூல்களை உலகறியச் செய்யவேண்டும்.

மனிதருக்குள் மனிதரை நாம் பார்க்கக் கூடியதாக இருக்க வேண்டும். காந்தியின் சொற்களுக்கு மதிப்பிருந்தது எதனால்? அவர் சொன்னது மாதிரி வாழ்ந்து காட்டினார். தியாகம்புரிந்தார். பிறருக்கு உதவுபவன் பிறர் துன்பத்தைக்கண்டு அதைத் தீர்ப்பதற்காகத் தன்னலத்தைத் தியாகம் செய்பவன் மனிதருள் மாணிக்கமாகஇலங்குகிறான். அவ்வாறு நாம் நம் வாழ்க்கையை வளம்படுத்த முயற்சிப்போமாக.

—

### கரம்பன் சபையின் பெருப்பணி

சிவபெருமானை வழிபடுகின்றவர்கள் திருநீறணிந்து ஐந்தெழுத்தோதி இறைவனை வழிபடும் நித்திய கருமஞ் செய்ய வேண்டியவர்கள். சைவசமயிகள் என்ற சிறப்புப் பெறுவதற்குச் சிவதீக்கை இன்றியமையாதது. ஐந்தாண்டில் எழுத்து அறிவது. ஏழாண்டதனில் சமயப்பிரவேசம் செய்து மெய்யறிவு பெறவேண்டும். பல்லாயிரக்கணக்கான மாணாக்கர்களும் பன்னூற்றுக் கணக்கான பள்ளிக்கூடங்களும உள்ள ஈழத் தமிழகத்தில் சிவதீக்கையைப் பெறுகின்றவர்கள் எத்தனை பேர் என்று கேட்கிறோம். கரம்பன் சைவமகாசபை சைவ சமயச் சேவையில் நன்கு ஈடுபட்டு வருவதோடு மிகச் சிறந்த பணியாகிய சிவதீக்கையை தொண்ணூற்றொன்பது பிள்ளைகளுக்கு ஒரேநாளில் ஒழுங்குசெய்து ஒப்பற்ற தொண்டாற்றிய செய்தியைப் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கின்றோம். சைவ அன்பர்கள் எல்லாம் இந்த விதமாகச் சிறந்த சைவ நெறியில் ஒழுக மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்க உழைப்பார்களாக.

—

### மாணவர்சங்க வருடாந்த விழாவும்

### பெற்றார் தினமும்

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மாணவர் சங்க வருடாந்தக் கூட்டமும் பெற்றார் தினமும் 5-4-62 வியாழக்கிழமையன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. டிை கூட்டத்துக்குத் தலைமையாசிரியர் திரு ஆ.இளையதம்பி தலைமை வகித்தார். பாடசாலையின் வளர்ச்சி பெற்றாரது கையில் பெரிதும் தங்கியிருக்கிறது என்ற கருத்து வற்புறுத்தப்பட்டது. கூட்டத்து நிகழ்ச்சிகள் யாவும் எல்லோரது உள்ளங்களையும் கவர்ந்தன. கடைசியில் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

(ந - நி.)

### வண்ணையோளிர் சாதனமே வாராய்!

த. மாலோகமணி

இந்துமக்கள் சாதனங்கள் இன்தமிழ்ச்சை வம்மிரண்டென்
றந்தமின்றி மக்கள் அறிந்திடவே — சந்ததமும்
நீடுஇங்கு எம்மிடையே நின்றுணர்வு நல்கிடவும்
நாடுழிநீ நல்வரவாய் நாடு!

சாதனங்க ளீதெனவே சைவமக்கள் நன்குணரப்,
போதமவை ஈட்டிப் புலன்செலுத்த, — மாசகன்ற
வண்வணையோளிர் சாதனமே வாராய் எனஅழைக்க.
எண்ணமிட வாராய் இனிது!

## எங்கள் சாதனம்

———:0:———

புறச்சமயப் பகைதோன்றி வலுவடைந்து சைவ சமயத்திற்குப் பேரிடர் விளைத்துவந்த ஞான்று, சைவ சமய அபிமானிகளுட் சிலர் பகைத்திமிரமகற்றுந் தினகரர்போற்றோன்றிச் சமயத்தையும் தமிழ் மொழியையும் போற்றி வளர்க்கவேண்டி இற்றைக்கு எழுபத்துமூன்று ஆண்டுகளுக்கு முன் "இந்துசாதனம்" என்னுமிவ் வெளியீட்டை நிறுவினார்கள். இதன்கண் சைவசமய உண்மைகளை இயன்றவரை மக்கள் உணருமாறும், உணர்ந்து கடைப்பிடித் தொழுகுமாறும், காலத்திற் றககாலம் அறிஞர்கள கட்டுரைகள் எழுதி அன்று மூடியிருந்த இருளை நீக்கி நல்லொளி பெருக்கி வந்தார்கள். அப்பெரியார்கள் செய்த கைமாறற்ற கருணைச் செயலால் நாமின்று சைவசமயிகளாகவும் தமிழ்த்திருமறைகளை ஓதி வழிபடுபவர்களாகவும் வாழுகின்றோம்.

மானிடயாக்கை எடுத்தலரிது. அவ்வாறு அரிய பிறப்பை எடுத்த நாம் ஆராய்ந்தறிய வேண்டியனவற்றுள் தலையாயன "நாம் யார்" இப்பிறப்பு எவ்வாறு வந்தது இவற்றைத் தந்தவர் யார்? அவரின் இலக்கணங்கள் எவை? என்பிததகையனவேயாம். இவற்றைப்பற்றி வேத சிவாகமக்களும், அவற்றின் சார்பாகத் தோன்றிய சந்தான குரவர்கள், சமயகுரவர்கள் அருளிச்செய்த நூல்களும், திருமுறைகளும் விரித்துக்கூறுகின்றன.

இவ்வாறு விரிந்து பரந்த நூல்களை எல்லாம் மக்கள் கற்று உணர்ந்து ஒழுகும் வாய்ப்புப்பெறமாட்டார்கள். ஆதலின் மக்கட் பிறப்பினருமையையும், அப்பிறப்பாலுயிர்பெறும் உறுதியையும், இவ்வுறுதியையளிக்கும் ஓர் நிரந்தரமான மெய்ப்பொருளின் இலக்கணங்களையும் எடுத்துக்கூறி மக்களை நன்னெறியிற் படரச்செய்ய வேண்டியே'இந்துசாதனம்'தோன்றிற்று.தோன்றி எழுபத்துமூன்று ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகின்றது. இவ்வளவு நீடித்த காலத்திற்குள் எத்தனையோ பிறவெளியீடுகள் தோன்றி மறைந்து விட்டன. இந்துசாதனம் கொண்ட நன்னோக்கமும், அதனை ஆதரித்துவரும் சந்தா நேயர்களின் பேரார்வமுமே இவ்வளவு காலம் தொண்டாற்றிவர உதவிபுரிந்தன.

நவநாகரீகங்கள் புகுந்து சமயக்கொள்கைகள் தடுமாறி மக்களிற் சிலர் மாக்களாக வாழும் இந்நாளில், உண்மைச் சமய போதனைக்கிடமுண்டோ, காலதேசவர்த்தமானங்களைக் கடந்து நிற்கும் ஓர் உண்மைப்பொருளைப்பற்றி எடுத்துக்கூறின், அதனைப் படித்தின்புற்றுப் பயன்பெறுவாருமுண்டோ.

இலைமறைகாய்போல ஒருசிலர் உளரேயன்றி மற்றப் பெரும் பாலான மக்கள் நாடிப்படிக்கமாட்டார்கள். இன்று காலங்கடந்த பழைய வர்த்தமானங்கள்போக, புதியவற்றையே மக்கள் நாடி நிற்கின்றார்கள். அவர்களின் தாகத்தைத்தீர்க்கவேண்டியே இன்று வெளியாகும் வெளியீடுகளிற் பல முனைந்து நிற்கின்றன.

இற்றைக்கு எழுபது வருடங்களுக்கு முன் ஓர் அமரிக்க அறிஞன் கூறியதை இங்கு கூற விரும்புகின்றேன். 'Read not the times, But read the Eternities'' என்று எழுதியுள்ளார். இன்று வரும் புதியவர்த்தமானக்கள் மக்களை மேலும்மேலும் துன்பத்தளாழ்த்துகின்றன. வர்த்தகப்போட்டிகள், கள்ளச்சந்தை நெறிமுறைகள், அரசியற்குழறல்கள், கொலை, களவு, தற்கொலைச் செய்திகள், காதல் திருவிளையாடல்கள் இன்னுமிவைபோன்ற பிறவுமே இன்றுவரும் வெளியீடுகளில் நாம் காணககிடக்கின்றன. ஆம், உலகத்தோடு ஒற்றுமைப்பட்டு வாழவேண்டாமோவெனின் எதனோடு ஒற்றுமைப்பட வேண்டும். பொய் வேடங்காட்டிப் போலிக் கூத்தாடும் புன்னெறிகளுடன் ஒற்றுமைப்பட்டாவதென்ன. மனிதன் தன்னைத் தூய்மைப்படுத்தி மேலோங்கி நன்னெறியிற் படர விழைவனாயின் நிரந்தரமானவற்றையே கற்கவேண்டும். ஆதலால் எங்கள் இந்துசாதனம் இவ்விதமான கோலங்களுடன் வெளிவரமாட்டாது என்பதை அன்பர்கள் அறிவார்கள. அறிந்தே இவ்வளவு காலமும் இதனை ஆதரித்து வருகின்றார்கள். அவர்களுக்குச் சைவ உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கின்றது ஆனால் அவர்களுட் சிலர் எக்காரணம்பற்றியோ தாங்கள் உதவும் சந்தாப்பணத்தை உரிய காலங்களில் கொடுத்து இந்துசாதனம் ஊக்கத்துடன் உழைத்துவர உதவி செய்கின்றார்களில்லையே என வருந்துகின்றோம். சந்தா நேயச் செல்வர்களே! "மன்னனும் முன்னுவ பொன்னால் முடியும்" பொருள் முட்டுப் பாடுவரின் ஊககம் தளரும், ஊக்கம் தளர ஆற்றல் குன்றுமன்றே. இவ்விலம்பாட்டைப்போக்கி இந்துசாதனம் தளராது தொண்டாற்ற வேண்டின். அன்பர்கள் தங்கள் சந்தாப்பணத்தைக் காலந்தவறாது அனுப்பி வைப்பதோடு புதிதாகச் சில சந்தா நேயர்களையும் சேர்த்துதவ வேண்டும். இவ்வகையில் எங்கள் சைவப்பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள் பெருந் தொண்டாற்ற முடியும்.

இந்துசாதனம் அதன் அன்பர்களின் ஆதரவால் மேலோங்கி வளர இறைவன் அருளை வேண்டுகின்றோம்.

சுந்தரன் தமிழுக் காகத் தூதுபோ யாளுஞ் சோம
சுந்தரன் மகனாய்த் தோன்றி சூரோடு கிளையும் மாய்த்து
அந்தரங் குடிபுகுத்தி யானையை மானை வேட்ட
கந்தன தருளா லிந்து சாதனம் வாழி யூழி.

# அனைத்தும் அடிபணியும் அன்பு

உலகில் வாழ்கின்ற ஜீவராசிகள் அனைத்தும் இன்பமாக வாழவேண்டுமாயின் அன்பு அவசியமானதாகும். அன்புதான் எல்லா அறங்களையும் தருவது. அறத்தின் வித்தாக விளங்குவது அன்பு அன்புக்கு இணையான பொருள் வேறு ஒன்றுமேயில்லை. அன்பின் கனிவில் இருந்து ஊற்றெடுத்துப் பாடப்பட்டதுதான் மாணிக்கவாசகரின் திருவாசகம். அதனைப் படிக்கும்போதும் கேட்கும்போதும் உருகாதார் யாரும் இல்லை என்றே கூறலாம்.

அன்பு நிறைந்தவர்கள் எல்லாருக்கும் உரிமையுடையவர். அவருடைய எலும்பும் பிறருக்குப் பயன்படும் இதனையே வள்ளுவர் பெருமான்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு
(குறள்)

என்றார்.

ஒரு பொருளுக்குப் பெருமை அப்பொருளின் உயர்வாகிய தனித்தன்மையில் இல்லை. அப்பொருளை ஈபவனுடைய அன்பின் அருமையிலேதான் உயர்வு அடங்கியுள்ளது.

அன்பில்லாதவன் மனையில் இருந்து உண்ணும் உணவு வேம்புபோல் கசக்கும்.

"விருப்பில்லார் இல்லத்து
வேறிருந் துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை
வேம்பாம்".

என்று கூறுகிறது நாலடியார். உண்மை அன்புடன் தந்த உப்பில்லாத கஞ்சியும் அன்பின் மிகுதியால் அமிர்தமாகத் தித்திக்கும். அன்பின் சிகரமாக விளங்கிய கண்ணப்பரின் எச்சில் மாமிசத்துண்டு சிவபிரானுக்குப் புதிய அமிர்தமாக விளங்கியது குசேலரின் அவல் கண்ணபிரானுக்குத் தித்திக்கும் அமிர்தமாகியது. அன்புதான் அடி

சைவப்புலவர்
**ஆசிரியர் வ. கந்தசாமி**
நாவலர் வித்தியாசாலை

பணியச் செய்யும். அதிகாரம் பாவத்தை வளர்க்கும் அன்பிலேதான் அணைப்பும் ஆதரவும் உண்டு. அன்பிலேதான் அஹிம்சையைக் காண முடியும. அதிலேதான் இணையற்ற இன்பம உண்டு.

அன்பு எல்லோரிடத்தும் இருக்குமாயின் நீதியான ஆட்சி நடைபெறும். அறமல்லாத மறச் செயல்களைச் செய்வதற்கு அன்பு இடம் தராது. அன்புக்கு முதல் இடம் கொடுத்து மக்கள் வாழ்வார்களேயானால் நாட்டில் எவ்வித இன்னலும் ஏற்படாது நகர் காவலர் நிலையம், நீதிஸ்தலம் என்பன தேவைப்படா.

அன்பினால் உள்ளம் உயரும். உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெறலாம். அன்பில்லாதவன் எலும்பின்மீது தோல் போர்த்த ஒரு பொம்மையாகும்.

"அன்பின் வழியது உயர்நிலை
அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு".

என்கின்றார் திருவள்ளுவர். பயன் கருதாது செய்கின்ற செயலே அன்பாகும். அன்பு பிறவியைக் 'கெடுக்கும்' ஆசை பிறவியைக் கொடுக்கும்.

ஆகவே எதிர்வரும் புதுவருடப் பிறப்பு முதல் அன்பைக்கடைப்பிடித்து அஹிம்சை வழிபற் சென்று அல்லல்தீர்த்து பேரின்ப வாழ்வை அடைவோமாக.

—·—

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உசன் கந்தசுவாமிகோவில் தர்மகர்த்தாக்கள் கரம்பகம் 1. தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம், 2 கந்தையா விநாசித்தம்பி 3. சந்திரசேகரி இராசரத்தினம், 4. உசல கந்தையா சுவாமிநாதர்.
—வழக்காளிகள்

இல. 1929
மிருசுவில், பென்யமின்
யேம்ஸ் கரல்டோ பொன்ராசா.
—எதிராளி
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
கிழக்கு நீராவியடி ரோட்டு
நாகராசா பரமநாதன்,
—கூட்டு எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 1929-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டு கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1962-ம் ஆண்டு மே (வைகாசி மாதம் 26-ம் திகதி (26-5-62 சனிக்கிழமை முறபகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல் வட்டி ரூபாய் 8325-ம். இதில் ரூபா 6000-க்கு 12-1-60 திகதி தொடக்கம் 13-6-60 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுப்படும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு ரூபா 289—57½ சதம்.

காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி எழுதுமட்டுவாள் கோவிற்பற்று மிருசுவிலிறை "செம்பாடு" நிலப்பரப்பு 15 1/4-ல் "நுணுவில் செம்பாடு" நிலப்பரப்பு 14 3/8-ம் ஆட்சிப்படி மேலதிகம் நிலப்பரப்பு 7 3/8-ம் சேர்ந்து நிலப்பரப்பு 37-ம். எல்லை கிழக்கு எஸ்.என். சின்னத்தம்பியின் ஆதனம், வடக்கு சரவணமுத்து கார்த்திகேசுவுக்கும் எஸ். ரீ. றிச்சாட்டுக்கு முரிய ஆதனங்கள் மேற்கு ஒழுங்கை, தெற்கு உசன் ஊரெல்லை ஒழுங்கை. இதில் காணியிலும் பிரயோசனங்களிலும் சொரியலாய் அரைவாசியும். கல்வீடும் கிணறும்.

முற்பதிவு F 289/182.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer.
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 6-4-1962.
M. 3 18-4-62

## கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பவிழா

வடகொழும்பு இந்துபரிபாலன சங்கத்தின் சார்பில், கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ. பொன்னம்பலவாணேஸ்வர சுவாமி கோவிலில் சனிக்கிழமைதோறும் மாலை 6 மணிமுதல் கூட்டுப் பிரார்த்தனை, பஜனை, சமயப்பிரசாரம் ஆதியன நடாத்துவதற்கான ஒழுங்குகளை, மேற்படி சங்க நிர்வாகசபை முடிவு செய்துள்ளது.

தொடக்கவிழாவை (14 4 62) சனிக்கிழமை, புதுவருடப் பிறப்பிலன்று மாலை 5 மணிக்கு ஆரம்பிப்பதெனவும், விழாவில் தோத்திரப் பாடல்கள், சொற்பொழிவுகள் ஆதியென இடம் பெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## பண்டிதர் பிரமஸ்ரீ வ.மு.இரத்தினேசுவரஐயர் 80 ஆவது ஆண்டாரம்ப விழா



ஐயரவர்களும் மனைவியாரும்

ஈழநாடு இந்தியா பர்மா ஆகிய இடங்களில் சைவத்தொண்டு, தமிழ்த்தொண்டு புரிந்தவரும் ஆசிரியராகவும், பிரசாரராகவும் நெடுங்காலம் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும்தொண்டு புரிந்து வருகின்றவருமான பெரியார் பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்களின் 80ஆவது ஆண்டு ஆரம்பவிழா யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சுபகிருது ஆு சித்திரை மீ 21 உ (4-5-62) வெள்ளிக்கிழமை கொண்டாடப் படுமென அறிகின்றோம்.

——

## பசுமட பரிபாலனம்

———0———

நமது தமிழகத்தில் சிவாலயங்கள் பல இருக்கின்றன. சிவாபிஷேகத்திற்குப் பஞ்சகவ்வியம் முக்கியமானது அதனால், பாரத நாட்டில் பசுமட தருமம பெரும்பான்மையாக நகர வைசியர்களால் நடத்தப்படுகின்றது யாழ்ப்பாணத்தில் பசுமடம் என்று தனியாக அமையவில்லை சில புண்ணிய வான்கள் மாடுகளைவளர்த்து அதன் பாலை ஆலயங்களுக்குக்கொடுத்து வருகிறார்கள்.

திருக்கேதீச்சரத்திற்குப் பல மாடுகளிருக்கின்றன. பால் வற்றினால் அம்மாடுகளைப் பாதுகாப்பதே அறம் சிலர் பசுக்கள் உட்பட நூறு ஐம்பது என்று, மாடுகளை வாங்கி அதனை அடித்துப் புண்ணியம தேடுவார்க்கு விற்று மகிழுகிறார்கள். இது மகாபாதகம் இனியாவது திருப்பணிச் சபையார் பசுக்களை முறையாகப் பாதுகாக்க முன்வருவார்களாக.

வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்
3—4—62.

## அடைவு நகை ஏல விற்பனவு

—0—

பருத்தித்துறை தம்பளை, வடலிப்பாதியிலிருக்கும், அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி. நா. சிவப்பிரகாசம், & ஸ்ரீமதி. வே. விநாசித்தம்பி அவர்களிடம் 1958—ம் ஆண்டு தைமீ 1-ந்தேதி தொடக்கம் 1959-ம் ஆண்டு மார்கழிமீ 31-ந்தேதி முடியும் வரையும் உள்ள மீளாத நகைகள் யாவும் 1962-ம் ஆண்டு வைகாசிமீ 5-ந்தேதி (5-5 62) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மேற்படியார் கடையிலிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாருஐயர்,
வெந்தீஸ் மேஸ்தர்
&
விலைமதிப்பாளர்.
சந்திதிவேல்
பருத்தித்துறை
2 4-1962.
M 1 20—4—62.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோடு
கிளிநொச்சி சயசிங்கி பத்திரான்கலகே பெப்பிசிங்கோ
— வழக்காளி
இல 2135.
1 கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் வயிரமுத்து இளையதம்பியும்
2 பெண பாறுபதிப்பிள்ளையும்.
— எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 2135 ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி கீழ்க்காணு மாதனவிடாப்பில் நன்கு விபரிக்கப்படுமாதனம் 1962-ம் ஆண்டு வைகாசி மீ 16ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை ரூபா 5090-ம் 26-12-60 தொடக்கம் 23.1-61 வரையும் ரூபா 3000 க்கு எட்டு வீதவட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீதவட்டியும்கோட்டுச் செலவு ரூபா 363-25 சதமும் இதில் கொடுபட்ட செலவு ரூபா 100 கழித்த தமிகுதி.

ஆதனவிடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி கிளிநொச்சிப் பட்டினம் பரவிப்பாஞ்சான் 2 றூட் 39 பேட்சும் தென்னை மரங்கள் செய்பயிர்களும் எல்லை கிழக்கு வாய்க்கால், வடக்கு மண் ஒழுங்கை, மேற்கு மாதவர் கணபதிப்பிள்ளைக்குரிய வாதனம், தெற்கு ஆறுமுகம் சின்னத்தம்பிக்குரியவாதனம். இதடங்கலு மிதைச்சேர்ந்தவைகளனைத்தும் பதிவு இல. B 34/128.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.
சாவகச்சேரி, 18-4-62.

## திருமுறை விழா

கொழும்பு விவேகானந்தசபை யாதரவில் இம்மாதம் 20, 21, 22 ஆந் திகதிகளில் காலையும் மாலையும் நடைபெற இருக்கும் திருமுறை விழாவில் மூன்று நாட்களும் தவத்திரு குன்றக்குடி அடிகள் விழாத் திறப்புரை, திருநெறிய தமிழ், மன்றுளார் அடியார் என்னும் தலைப்புகளிலும் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஞானசம்பந்த நாயகி, பதினொராம் திருமுறை, அமுதக்கடல் என்னும் தலையங்கங்களிலும், புலவர் ந ரா. முருகவேள் அவர்கள் திருநின்ற செம்மை, மூல இலக்கியம், தமிழ்ச் சமர்த்தர் என்னும் பொருள்கள்பற்றியும் சகோதரி சிவ பிருந்தாதேவி 'சுந்தரர் செந்தமிழ்' "பாவும் பல்லாண்டும்" என்னும் விடயங்களிலும் சொற்பொழிகள் ஆற்றுவர் மேலும பல தமிழறிஞர்களும் உரை நிகழ்த்துவர்.

விழா நிகழ்ச்சிகளில் திருமுறை ஓதுதல் முக்கிய இடம்பெறும். மூன்று நாட்களிலும் திருமுறை ஓதுவோர்: திருவாளர்கள் வே சிவஞானம், தி. மாணிக்கவாசகர், ச மார்க்கண்டேயர், ஸ்ரீமதி அம்பிகா தாமோதரம், இரத்தினதேவி நல்லசேகரம், ஞானு சிவசுப்பிரமணியம், தனலட்சுமி இராமச்சந்திரா புவனேஸ்வரி இராமச்சந்திரா, யோகா சிவசுப்பிரமணியம்.

—0—

## வேலணையில் திருக்குறள் மாநாடு

(முதற்பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் திரு ஐயன் பெருமாள்கோனார் அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள். இவர்களுடன் ஈழநாட்டுத் தமிழ்ப் பேரறிஞர்களும் உரைவிருந்தளிப்பர் திருக்குறள் ஏட்டுச்சுவடி ஊர்வலம் கருத்தரங்கு, கவி அரங்கு, இசை அரங்கு, நடன அரங்கு, நாடகம், திருக்குறள் ஓவியக்காட்சி முதலிய பல்வேறு நிகழ்ச்சிகள் மாநாட்டில் இடம் பெறும்.

கவி அரங்கு

கவி அரங்கிலே கலந்துகொள்ள விரும்பும் கவிஞர்கள் தமிழ்மறைக் கழகத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்

பொருட்காட்சி

இம்மாநாட்டின்போது குடிசைக் கைத்தொழில் - சிறுகைத்தொழிற் பொருட்காட்சியினையும நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. இக்காட்சிக்குப் பொருள்களை அனுப்ப விரும்பும் நிலையத்தினரும அன்பர்களும தமிழ்மறைக் கழகத் தலைவருடன் தொடர்பு கொள்வார்களாக.

முகவரி:
58. உருத்திரமாவத்தை,
கொழும்பு-6.

யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலேயும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


இவ்வாரம் (15-4-62 — 21-4-62)

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

தொழில் விவகாரங்களைப் பொறுத்தளவில் சாதகமான வாரம். நண்பர்கள் உதவுவர். சிறு உடல்நிலைக்கோளாறுகளுண்டாம், வேலையும் கூடுதலாக இருக்கும்.

**இடபராசி கார்த்திகை 2, 3. 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

செலவுகள் பெருகும். புது முயற்சிகள் தடைப்படும். உடன்பிறந்தோர் மூலமான இலாபங்கள் நிச்சயம். விவசாய ஈடுபாடுகள் நல்ல பலனைத்தரும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.**

மிகச் சாதகமான வாரம். உமது வேலைகள் மிக எளிதாகச் செய்து முடிக்கப்பெறுவீர். நண்பர்கள் மிக உதவியாக இருப்பர். சில புலங்களால் இலாபமும் நிச்சயம்.

**கடகராசி புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

குடும்ப அலுவல்கள் குழப்பமாக இருக்கும். மன அமைதி இருக்காது. தொழில் முறைகளில் சில முன்னேற்ற முண்டாம். தந்தைவழி உறவினருடன் கவனமாக நடந்துகொள்க.

**சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.**

சிறு உடல் நிலைக் குழப்பங்களைத்தவிர மற்றும்படி இவ்வாரம் மிகச் சாதகமானது. எதிரிகளுக்கு இடையூறும் புதுமுயற்சிகளில் வெற்றியும் நிச்சயம், கண் நோய்களுக்கு இடமுண்டு.

**கன்னிராசி உத்தரம் 2, 3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2 பாதம்.**

இவ்வாரம் அவ்வளவு நன்மையானதல்ல, உமது பாதையில் தடைகள் பல இடப்படும், சில காலத்திற்கு உடல் நிலையில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

**துலாம், சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

தாயாருக்குச் சுகவீனமுண்டாகும். உமது உடல்நிலை கூடப் பாதிக்கப்படலாம். ஆனால் தொழில் வெற்றியும் எதிரிகளுக்கு இடையூறும் ஏற்படும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

தொடர்ந்து விவசாய ஈடுபாடுகளிலிருந்து இலாபம் கிடைத்து வரும். தின ஒழுங்கில் சில மாற்றம் ஏற்படலாம். குடும்ப நிலைமை திருப்திகரமாயிருக்காது. போட்டியிடுவோரை வாகைகொள்ளுதல் நிச்சயம்,

**தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.**

நண்பர்களோடு கலகங்களுக்கும் தவறான விளக்கங்களுக்கும்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## கரம்பன் சைவமகா சபையின்சிறந்தபணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இறங்கியிருக்கிறதுஎன்றும் கூறினர்.

சிவ. ஸ்ரீ. நா. ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் சிவதீட்சையை நடாத்தி வைத்துப் பேசுகையில் சமய தீட்சையில் ஏழு முறைகள் உண்டு. அதில் அவுத்திரி தீட்சை ஓமசம்பந்தமுடையது. மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு பார்த்தல் நயன தீட்சை எனப்படும். கருட பாவனையினல் விஷத்தை இறக்குவதுபோல் உள்ளது நயன தீட்சை. சிரசு முதல் பாதமவரை தொடுதல் பரிசை தீட்சை எனப்படும். அது காந்தம் இரும்பை இழுப்பது போல் சிஷ்யனைச் சிவமயமாக்குகின்றது. பஞ்சாட்சர உபதேசம் வாசக தீட்சை எனப்படும். இப்படி, தீட்சை பலவகைப்படும். இப்படி அரிய பெரிய பிறவியை எடுத்து நாம் சிவதீட்சை எடுககாவிட்டால் சிவத்துரோகம் செய்தவர்களாவோம்.

ஆலய வழிபாடு முதலிய சகல சடங்குகட்கும் சிவ தீட்சை முக்கியமாகும். சிவ தீட்சைபெற்ற ஒருவர்தான் ஆன்மாவைப் பந்தித்திருக்கின்ற பிறவித்துன்பத்தினின்றும் நீங்குதற்கு அருகதையுடையர். இதை ஆசாரம் தவருது எல்லோரும் அனுட்டித்தால் போகம் மோட்சம் கிடைக்கும். இக்கிரியை சிறப்பாக நடைபெறுதற்குச் சபையின் உபதலைவர் திரு. நா, மு. சரவணமுத்து அவர்கள் வேண்டிய நிதியைச் சபைக்கு உதவினர்கள். அவரின் சமயாபிமானம் பாராட்டற்குரியது.

## பிள்ளைப்பலி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தான். அந்த ஊர் நல்லவர்கள்மணியகாரனை வெறுத்தாலும் வேலாயுதனைக் கண்டதுமஅவனிடம்காணப்பட்ட பொலிவிலும் முகத்தில்விளங்கிய தெய்வீக அழகிலும் மயங்கி அவனை ஆசீர்வதித்துச்செல்வது வழக்கமாகிவிட்டது.

அந்த ஆண்டு வேள்வி நடப்பதற்கு இன்னும் பத்து மாதங்களிருந்தன. மணியகாரன் வேள்விக்காகப் பக்கத்து ஊரில் போய் நல்ல அழகு அமைப்பான ஆட்டுக்குட்டியொன்றைவாங்கிவந்து வீட்டில் கட்டினர். வேலாயுதன் அப்பொழுது ஏழுவயதுச் சிறுவன். அந்த ஆட்டின் பராமரிப்பு முழுவதும் வேலாயுதம்தான். காலையும், மாலையும் பள்ளி செல்லும் நேரம் தவிர்ந்த எந்த நேரமும் அந்த ஆட்டோடுதான் வேலாயுதம் அலைவான். பலாமரங்கள் நிறைந்த அவர்கள் வீட்டு வளவில் பின்னல் திரிந்து அதை மேய்ப்பது, பிண்ணாக்குக் கரைத்து வைப்பது, அதன் கழுத்தை அன்போடு வளைத்துக்கொண்டு செல்லம் விளையாடுவது கண்ட கண்டவர்களிடமெல்லாம் அதைப் பற்றியே பெருமையோடும் பாசத்தோடும் பேசிக்கொள்வது இப்படியான செயல்களில் தாய்தந்தைபரையும் மறந்து திரிந்தான் வேலாயுதம். பத்து மாதங்களும் கழிந்தன. ஆட்டுக்குட்டி, ஆட்டுக்கடாவாக வளர்ந்து கொழுத்து முறுக்கேறி குதிரைபோலக் கம்பீரமாக நின்றது.

மறுதினம் வேள்வி நடைபெறும் நாள்!

தனது ஆசைக்கும் அன்புக்குமுரிய ஆடு நாளை வெட்டிக் கொல்லப்படப் போகிறது என்பதை எப்படியோ கேள்வியுற்ற வேலாயுதன் மனம் அதிர்ந்தான், அதைக் கொல்ல வேண்டா மென்று தந்தையிடம் கெஞ்சிக் கூத்தாடிப்பார்த்தான் முடியவில்லை. தாயின் தயவை நாடினன். கத்திக் கதறித் தனது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளச் செய்தான்.

அன்று வேள்வி நாள்; தனது ஆடு கொல்லப்படப் போவதில்லையென்று மனம் தேறி மகிழ்ந்திருந்த வேலாயுதத்தை ஆசை வார்த்தைகள் கூறி அன்று காலையே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டாள் தாய். அவன் கண்முன்னல் கொல்லாமல் இரகசியமாக வெட்டினல் அவன் வேதனைப்பட மாட்டான் அன்றைக்கே ஓர் ஆட்டுக்குட்டி கொண்டுவந்து அவனிடம் கொடுத்துவிட்டால் இந்த அட்டை மறந்துவிடுவான். என்பது அவர்கள் நம்பிக்கை.

இராச மரியாதையோடும் குதூகல ஆரவாரங்களோடும் தவில் முழக்கோடும் கோவிலுக்குச் செல்லவேண்டிய ஆட்டுக்கடா இரகசியமாகக் கொண்டுவரப்பட்டது.வேலாயுதன் கையால் ஊட்டி வளர்த்த அந்த ஆடே அங்கு வந்து நின்ற ஏனைய நூற்றுக்கணக்கான ஆடுகளிலும் பார்க்க கொழுப்பும், உயரமும், மிடுக்கும பெற்றுத் தலைக்கடாவாக நின்றது, பூசை மரியாதைகள் முடிந்தன. மாலை விழுந்துகிடந்த அந்தக்கடாவின் கழுத்தில், பூசாரியின் பளபளக்கும் கத்தி விழுந்தது. ஆரவாரத்தினிடையே அது உடல் வேறு கழுத்துவேருக விழுந்து, இரு கூறுகளும் துடிதுடிக்கலாயிற்று. தொடர்ந்து சருர் சருர் என்ற கத்தியின் சத்தங்கள்! ஆடுகள் இரண்டு துண்டுகளாகியவண்ணமிருந்தன எங்கும் துடிதுடிக்கும் ஆட்டுத்தலைகள். சடலங்கள். எங்கும் அவற்றின் மரண ஓலங்கள்.

திடீரென்று "ஹோ" வென்று யாரோ பயங்கரமாகக் கூவும் குரல் கேட்கிறது. எல்லோரும் மருண்டு பார்க்கையில் சனக்கூட்டத்தையும் இடித்து விலக்கிக்கொண்டு களத்துள் புகுந்தான் வேலாயுதன். மற்றவர்கள் அவனைப் பிடித்துக்கொள்ளு முன் குதிரைபோன்ற தனது ஆட்டின் உடலை லேசாக இனங்கண்டு கொண்டு அதன்மேல் விழுந்து 'ஐயோ!என்றுகட்டிப்புரண்டு கதறினன்; அவ்வளவுதான். அதோடு அவன் குரல் ஒடுங்கிவிட்டது. தலைசாய்நதுவிட்டது அவன் பிணமானன்!

அன்றே மணியகாரன் மனம் மாறிவிட்டது. இப்பொழுது இது பழைய கோயில். பழைய தெய்வீக ஒளி மீண்டும் இங்கு பரவி நிற்கிறது.

x x x

கதை முடிந்தது. நான் கண்களில் ஊறிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்தேன்; வேலாயுதத்தைக் கண்முன் கண்டதுபோல் என் கரங்கள் எழுந்து குவிந்தன.

## ஊழூழி வாழ்க!

—0—

பண்டிதர் பொ. ஜகந்நாதன்

சேந்தமிழ்க் கலையினைத் திகழ்சைவ நெறியினைத்
தேசத்தே பரப்ப வெண்ணி
தந்தளி செய்தனர் நின்னையாழ் ப்பாணச்
சைவபரி பாலன சபையார்
இந்துசா தனமேநீ புதுவருடத் தோடும்
இறையவன் அருளி ஞலே
வந்துயர் மதியென வாழ்கவே யூழூழி
வரம்பிலாக் கால மேயே.

# திருவருட்பயன் விடை வினா

ஆசிரியர் சைவப்புலவர் திரு. இ. செல்லத்துரை

## ஒன்பதாம் அதிகாரம்: ஐந்தெழுத்தருள்நிலை

Vi. ஐந்தெழுந்தின் பொருளை உணர்த்தும் (வேதாகமங்கள் தவிர்ந்த) ஏனைய ஞான நூல்கள் யாவை?

அவை, உபநிடதங்கள், உபாகமங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், சைவத் திருமுறைகள், புராணங்கள் என்பனவும் இன்னோரன்ன பிறவுமாம்.

Vii. சைவ சித்தாந்த சாத்திரங்கள் யாவை?

மெய்யடியார்கள் சைவாகமங்களின் ஞானபாதத்தில் உரைக்கப்பட்ட சித்தாந்த முடிபுகளை விரித்து விளக்கி நூல் செய்தார்கள். அங்ஙனம அவர்கள் உரைத்த பதினுன்கு நூல்களே சைவ சிததாநத சாத்திரங்கள் எனவும, மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் வழங்கப்படுவன. உண்மை ஞானத்தால் மெய்ப்பொருளைக் கண்டுணர்ந்த சந்தானத்தாரால் அவை உரைக்கப்பட்டனவாதலின் மெய்கண்ட சாத்திரங்கள் எனப்பட்டன. அந்நூல்களின் பெயரும் அருளியவர்களது பெயரும் வருமாறு:

1. திருவுந்தியார்: —திருவியலூர் உய்யவந்த தேவநாயனர்.
2. திருக்களிற்றுப்பாடியார்: —திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர்.
3. சிவஞானபோதம்: மெய்கண்டதேவர்,
4. சிவஞான சித்தியார்,
5. இருபாவிருபஃது: —அருணந்தி சிவாசாரியார்.
6. உண்மை விளக்கம்: —மனவாசகங்கடந்த தேவநாயனர்.
7. சிவப்பிரகாசம், 8, திருவருட்பயன், 9. வினு வெண்பா, 10. போற்றிப்பஃறொடை, 11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடுதூது, 13 உண்மை நெறி விளக்கம், 14. சங்கற்ப நிராகரணம் —உமாபதிசிவாசாரியார்.

இந்நூல்களுள் உமாபதிசிவாசாரியார் இயற்றிய எட்டு நூல்களும சித்தாந்த அட்டகங்கள் என அழைக்கப்படுவன.

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம் — வந்தவருட்
பண்புவினு போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று."

—தொடரும்,

# எமது கர்மவினை தீர புத்தாண்டிலே புது வழிகளைப் பின்பற்றுவோம்

—————:0:—————

(ஸ்ரீமத் சு. பரமேசுவரா)

**வ**ருடந்தோறும்தான் புது ஆண்டு பிறக்கிறது. நாமுந்தான் விடாது கொண்டாடி வருகிறோம். ஆனால் எமது கொண்டாட்டங்கள் புது ஆண்டு பிறக்கும் நாளோடு மாத்திரம் நின்று விடுகிறது. ஏதோ நம் முன்னோர்கள் கொண்டாடினார்கள் என்பதற்காக — பழமையான வழக்கத்திற்காகவே நாம் எல்லோரும் புதுவருடமென்று கொள்கிறோமேயன்றி, அதன் உண்மையான நோக்கைக் கண்டு புதுவருடத்தைக் கொண்டாடுபவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் பிறக்கிறபோது சில குறிப்பிடப்பட்ட நட்சத்திரங்களுக்குப் பொருந்தாது இருக்கும். அந்நட்சத்திரத்திற் பிறந்தோர் சிறந்த கைங்கரியங்களைச் செய்யவேண்டும் என்றும், மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும் என்றும் பல நிவிர்த்திதோஷ பரிகாரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவைகளுக்கும் மேலாக நாம் பக்தியுடன் கடவுளை வணங்குவது எமது கர்மவினைகள் தீருவதற்கு நாம் பெரும் மருந்து செய்கிறோம் என்பதாகும்.

மனிதன் இன்றைய உலகில் எத்தனையோ பிரச்சினைகளை வைத்திருக்கிறான் உலகிலே எங்கு பார்த்தாலும் யுத்தபீதியும், சண்டைகளுமே காணப்படுகின்றன. ஏன்? ஒரு சிறு வீட்டிலேகூட எத்தனை பிரச்சினைகள் தலைதூக்கி நிற்கின்றன? அவையெல்லாம் மனிதர்களாற்றான் உண்டாக்கப்பட்டவை. கர்மவினை அப்படி ஆட்டி வைக்கிறது. அப்படிப்பட்ட 'கர்மபந்தத்தை' நாம் எல்லோரும் அகற்றவேண்டும். கர்மபந்தத்தை நீக்குவதற்குப் பல வழிகள் பேரறிஞர்களாற் சொல்லப்பட்டுள்ளன. சமயகுரவர்களின் வாழ்க்கையும் இன்னும் சிறந்த மெய்யடியார்களின் அநுபவமும் எமக்குப் பலவிதமான வழிகளைக் கூறினும் முக்கியமாக ஞானமார்க்கமும், பக்தி மார்க்கமுமே சிறப்பாகக் கைக்கொள்ளப்படுகிறது. எத்தகைய வழிகள் இருப்பினும் அவ்வழி ஒரே குறிக்கோளை அடையுமாயின் அது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகும். நாம் இப்போது எம்மையெல்லாம் துன்பத்திற்குள்ளாக்கும் "கர்ம சித்தாந்தம்" அதாவது "தொழிலின் தத்துவம்" என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

நாம் செய்யும் தொழில்தான் நமக்கு அதற்குரிய பெயரைக் கொடுக்கிறது. அதுபோல நாம் செய்யும் நன்மைகள் மறுபிறப்பில் எமக்கு நல்ல பயனைக் கட்டாயம் கொடுக்கும். தொழிலே நன்மையையும், தீமையையும் செய்ய வல்லது. தொழில் செய்வதால் தளைகள் எம்மைச் சூழுகின்றன. அதனால் பல பிரச்சினைகள் கிளம்புகின்றன. அத்தொழிலே எமக்கு மறுமையில் முக்தியையும் தரவல்லதாகும். அதை நிரூபிக்க ஆதாரம் காட்டத் தேவையில்லை. அதை மறுத்து வாதாடுவதாலும் பயனில்லை.

அப்படிப்பட்ட கர்மசித்தாந்தத்தை நீக்கும்வழியை நாம் தேட முயல்வது புத்தாண்டின் புது வழியாகவும், தீர்மானமாகவும் இருக்கவேண்டும்! எமது மானிடப்பிறப்பு அரிதிலும் அரிது எனப் பலராலும் கூறப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறோம், அநுபவத்திலும் பார்த்திருக்கிறோம்! எனவே மானிடப் பிறப்பே இறைவனைக் காண வழி செய்யும் இடமாகும்! இறைவனைக் காண்பதற்கு ஞான அறிவு தேவை! அதைப் பெற விரும்பாது வெறும் மூடனைப்போல வாழ்ந்துவிட்டு இறப்பதால் எமது பழைய கர்மம் எம்மைவிட்டு விலகிவிடாது! நாம் உயிர் வாழ்வதுகூட தொழில்வழி வந்த தோற்றமேயாகும். பிறப்பின் மூலாதாரமே தொழில்தான். எதையும் செய்யாமல் வெறும் சோம்பேறியாய் இருப்பதும், வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்வதும் கூட கர்மவினைதான். "மரணத்தின் பிறகாகுதல் மனிதன் பந்தங்களிலிருந்து விடுதலைபெற முடியாதா?" என்று யாராவது கேட்கலாம். அதற்கு மறுமொழி கூறமுடியும்! ஆனால் இறைவனைப்பற்றியும், உள்ள ஆகார உண்மைகளைப் புரிந்துகொள்ளாதவர்க்கும விடைகூறிப் பயனில்லை. எமது வாழ்வில் தோன்றி மறையும் எல்லாவிதச் செயல்களும் கர்மத்தை அதாவது தொழிலை அடிப்படையாகக் கொண்டே நடைபெறுவதாகும். இறைவனை இல்லை என்று வாதாடும் சிலர் தொழிலின் தளைகளில் இருந்து விடுபட்டு, ஒரு தொழிலும் புரியாது வெறும் அர்த்தமற்ற பேச்சுக்கள் பேசுவதாலும் மெய்ஞ்ஞானத்தைத் தூற்றிப் பழமைக் கொள்கைகளை எதிர்த்துப் புரட்சி செய்வதாலும் அவர்களது கொள்கை உண்மையாகி விடமுடியாது! அப்படி உண்மையாயின் ராமாட்சம், முக்தி, வீடுபெறும்வழி என்றெல்லாம வர்ணிக்கப்படும் உன்னத நிலையை ஏன் அவர்கள் தேடவேண்டும்?

எனவே எமது கர்மவினைகள்தீர ஞான மார்க்கமும், பக்திமார்க்கமும் மிக உதவி செய்கின்றன. அதுவே தொழிலாகும். அத்தொழில் இருவகைப்படும். ஒன்று கடமையில் கட்டுண்டு இயங்கும் இம்மைக்கான ஒரு தொழிலாகும். மற்றது இந்தப் பாசங்களினின்றும் விடுபட்டு முக்திதேடிச்செய்யப்படும் மறுமைக்கான தொழிலாகும். அப்படிப்பட்ட கர்மத் தளைகளைக் களைந்து ஓட்ட முயல்பவர்கள் கருத்தற்ற சர்ச்சைகளைப் பேசுகின்றனர். அதுகூட கர்மவினைதான். ஞானமும் பக்தியும் இறைவனை அடையக்கூடிய சாதனங்களாகும். இதையறியாத நாஸ்திகக் கூட்டம் மெய்யன்பர்களின் மணிமொழிகளையும் அநுபவ உண்மைகளையும் மறுத்து எதிர்த்துப் பேசுகின்றனர். அதுகூட கர்மபந்தத்தின் திருவிளையாடல்தான்! சகலவிதமான தொழில்களையும் துறந்துவிட்ட இந்தத் தீவிரவாதகள் மௌனமாக இருப்பதுவே அவர்கள் புரியும் சிறந்த செயலாக இருக்கும். அதனால் அவர்கள் தொழிலின் சித்தாந்தத்தைக் கட்டாயம் அறிய முடியும்! கர்ம பந்தத்தை அறிய முதலில் மோன நிலை அவசியமாகும். எனவே, எதிர்வரும் புதுமை தரப்போகும் புதுஆண்டிலே நாமெல்லோரும் இறைவனைக் காணக்கூடிய கர்ம மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஆசாபாசங்களிலிருந்து கடைத்தேறுவோமாக! மானிட வாழ்வின் நோக்கத்தை அறிந்து நடப்போமாக.

———

## வாழ்க்கையில் வெற்றிக்கு வழி ......

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆசாரமாக வாழ்கின்றவன், நற்குடிப்பிறப்பு, நெடிய வாணாள், செல்வம், அழகுடைமை, நிலத்துக்குரிமை சொற் செலவு, கல்வி, நோயின்மை என்ற எட்டுப் பேறுகளையும் அடைவானென ஆசாரக்கோவையென்னும் பழைய தமிழ் நூல் கூறுகின்றது.

நோயாளன் ஒருவன் தன்னுடைய நோயை நீக்குவதற்கு ஒரு வைத்தியனிடம் செல்கின்றான். வைத்தியன் அவனுடைய உடலைச் சோதித்து நோயை நீக்குவதற்குரிய மருந்தினைக்கொடுத்து அனுபானம் பத்தியம் முதலியவற்றைக் கூறிக்கொடுக்கின்றான். நோயாளன் அம்மருந்தினை வைத்தியன் சொன்ன அனுபானம் பத்தியங்களை அனுட்டித்து மருந்தினையருந்தினால்தான் நோய் மாறும். அவ்விதம் அவற்றை அலட்சியம் செய்வானாயின் அவனுக்கு நோய் மாறாது. அதுபோலவே மனிதப்பிறவியை எடுத்த நாமும் சிவபெருமானுடைய திருவருளாகிய மருந்தினை யருந்தி மேலே சொல்லப்பட்ட ஆசாரங்களைக் கைக்கொண்டொழுகினால் எங்களிடத்திலுள்ள ஆணவம் கன்மம் மாயை ஆகியமும்மலப்பிணிகளும்எங்களைவிட்டு நீங்கும். நீங்க நாம் மானிடப் பிறவியெடுத்த பயனை அடைந்து பேரின்ப வாழ்வைப் பெறுவோம்.

"சுத்தம் சோறுதரும்" என்னும் முதுமொழி ஆசாரத்தின் அவசியத்தையும், அதன் பெறுபேற்றையும் சுருக்கச்சொல்லி விளக்குகின்றது. (சோறு – முத்தி)

———

## புரட்சிக் கவி கண்ட

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாற வேண்டும். இந்த உறக்க நிலையிலிருந்து நம் பெண்கள் விழித்தெழுந்து தமக்குரிய செம்மையான பாதையில் தாமும் செல்வதோடு தம்மவரையும் சகலரையும் ஏன் உலகையே அந்த அறவழியில் செலுத்த இனியாவது முயல வேண்டும். பெரியபுராணம் கூறும்,

"மங்கையர்க்குத் தனியரசி
 எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து
 வளைகை மானி
செங்கமலத் திருமடந்தை
 கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த
 தெய்வப் பாவை"

என்ற திருமங்கையாகிய மங்கையர்க்கரசியெனும் ஒப்பற்ற பெண்ணரசி மதுரையில் அக்காலத்தில் சிவநெறியாகிய ஒளிநெறி மங்கி பிறநெறியாகிய சமணநெறி விரைவில் சூழக்கண்டும், செம்மையான திருநீற்றின் ஒளி மறைந்து எங்கும், பாயும் பீலியும் பரவக் கண்டும், அசைக்க முடியாத தமது ஆழமான சமயப் பற்றினால், நெறிக் கண்ணானது சமயமான சைவ சமயத்தின்மேல்கொண்ட காதலால் குலச்சிறையார் என்ற நல்லமைச்சரான சைவப் பெரியாரது உதவியோடு சமணமார்க்கத்தில் ஆழ்ந்துவிட்ட தமது கணவரையும், மதுரையம்பதியையும்மீட்டுச் சப்பந்தப்பெருமானது ஆசியோடு தமிழ் நாட்டில் சிவமணங் கமழச் செய்தார். பர சமயமான சமணசமயப்படுகுழியில் வீழ்ந்துவிட்ட நாவுக்கரசரையும் அதிலிருந்து மீட்டுச் சிறந்த சமயமாகிய சைவ சமயத்தில் புகுத்தி, அவரது ஞானக்கண்ணைத் திறந்து, இறைவனுக்கு அரும்பணிகள் செய்யும்படி செய்தவரும் திலகவதியார் என்ற ஒரு பெண்தெய்வமே அது மட்டுமல்ல கற்பெனும் பெண்ணறம்பூண்ட புனிதவதியார் தம் அரிய சாதனையால் கணவனையே பக்திப் பரவசத்தில் ஆழ்த்திப் பின், உலகிற் சிறந்ததும், கண்கண்ட சமயமுமான சைவசமயபிரகாசத்தைப் பரப்பி, அவ்வொளியில் திளைக்கவும், இறைவனது திருவடிகளையடையவும் பேய்வடிவை விரும்பியடைந்து தம் ஊனெல்லாம்தேய, அங்கமெல்லாம் உருக அன்பே வடிவாகி இறைவனையடைந்து, அவரால் 'அம்மையே' என அழைக்கப்பெற்று அவர்பால் நீங்காத பக்திபூண்டு பிறவாத தன்மையையும் பிறக்கவிருவேளைநேரின் அவர் மலரடிகள் தமது மனதை விட்டு நீங்காமலிருக்கும்பேற்றையும வரம் தரப்பெற்று எம்பெருமானோடு இரண்டறக் கலக்கும் பெருமையையும் பெற்றார். இப்படியெல்லாம் சமய உலகில் பெண்ணரசிகள் ஒளிகொடுத்ததைநாம் மறப்போமா?

இன்று நம்மிடையே நடமாடும் பெண்கள் பாரதியார் கண்ட புதுமைப்பெண்கள் என்பதில் ஐயமில்லை.

"பட்டங்கள் ஆழ்வதும்
 சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த
 வந்தோம்" என்றும்,

"வேதம் படைக்கவும்
 நீதிகள் செய்யவும்
 வேண்டி வந்தோமென்று
 கும்மியடி" என்றும்,

புரட்சிக்கவி பாரதியார் கற்பனையில் கண்ட இப்பெண்கள் அவர் அதே மூச்சில் கூறிய

"சாதம் படைக்கவும்
 செய்திடுவோம்; தெய்வச்
சாதிபடைக்கவும்செய்திடுவோம்"

என்ற சொல்லமுதத்தை, அதன் பொருளை மறந்துவிட்டனர்போலும். தமது புகழை அரசியல் வானிலும், மற்றும் கல்வி, சட்டம் முதலிய பல துறைகளிலும் பரப்பிய இம்மகளிர்கள் தங்கள் மென்கரங்களில் பெண்மையின் சின்னமும் செங்கோலுமான அகப்பையைத் தாங்கி அறுசுவையுண்டி சமைத்து இல்லறத்தின் ஒரு பண்பான விருந்தோம்பலையும் செவ்வனே செய்யப் பழகிக்கொள்ள வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்.)

———

## இவ்வாரம் உங்கள்

6-ம் பக்கத் தொடர்ச்சி

இடமுண்டு. அலுவலகத்தில் தொல்லைகள் உண்டாம். தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும். உமது உடல் நிலையும் திருப்திகரமாயிருக்காது.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

முதலிரு நாட்களும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும். உமது சொந்த விஷயங்கள் குழம்பலாக இருக்கும். உமக்கு மனநிம்மதி இருக்காது. பணமளவில் நல்ல வாரம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

முதலிரு நாட்களும் புதிய ஈடுபாடுகளுக்குச் சாதகமானவை. ஆனால் செவ்வாய் புதன் வியாழன் பாதகமானவை. கடைசி இருநாட்களும் மறுபடியும் சாதகமானவையாய் மாறும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

வார முன்பகுதி தொழில் முறைகளுக்கு ஏற்றது. ஆனால் உடல் நிலை பாதிக்கப்படலாம். வியாழன் மாலை, வெள்ளி, சனியை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

# பேராயிரம்பரவி வானோரேத்தும் பெம்மான்

நாம் நமது உடலுக்கு ஒரு நோய் வந்தால் அதை நீக்க எவ்வளவு முயற்சி செய்கிறோம். நமது உடலை வாட்டும் பிணிகளோ எண்ணிலாதன. அவற்றின் தன்மைகளைப் பற்றியும் அவைகளை நீக்கும் வகைகளைப் பற்றியும் கூறுவன வைத்திய நூல்களாகும். வைத்திய முறைகளால் குணப்படுத்த முடியாத பல நோய்கள் உளவென்பது வைத்திய வல்லுநர் முடிபு.

உடம்பைப் போலவே உயிரையும் பற்றிநிற்கும் நோய்கள் உண்டு அவை ஆணவம், கன்மம் மாயை என்பன. அந்த நோயின் தன்மைக்கேற்ப நமது உடல் நோயின் தன்மைகளும் இன்ப துன்பங்களும் ஏற்படுகின்றன. உயிரைப் பிடித்த நோயை நீக்குவதன் மூலம் நமது உடல் நோயையும் பிறவித் துன்பத்தையும் நீக்க வல்லவர் இறைவன். இறைவனுக்கு ஓர் உருவம் இல்லை. ஓர் குணம் இல்லை, ஒரு பெயர் இல்லை. ஆனால் அவரை ஆயிரம் பேர்களை இட்டு அழைக்கிறார்கள். அவரும் அவர்கள் அழைப்பதற்கிணங்க ஆயிரம் திருவுருவங்களுடனும் காட்சியளிக்கிறார். மானிடர் மாத்திரமல்ல தேவர்களும் இறைவனை ஏத்துகின்றார்கள் "பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானை" என்பது அப்பர் வாக்கு "ஆயிரம் என்பது அளவின்மையைக் குறித்து நின்ற" தென்பர் திருவாசக உரையாசிரியர்.

அந்த அளவிறந்த நாமங்களிலே "வைத்தியநாதர்" என்பதும் ஒரு திருநாமம். உயிரின்கண்ணேயுள்ள தீர்க்கமுடியாத நோயைத் தீர்ப்பதற்குரிய மந்திரப் பொருளாகவும் மருந்தாகவும் உபாயமாகவும் இறைவன் இருக்கிறார். அவ்வாறு தீர்ப்பதிலே அடியார்க்கு யாவராலும் கொடுக்க முடியாத பெரும் செல்வத்தைக் கொடுத்தருள்கிறார் இறைவன முப்புரங்களையும் எரித்த கதை தேவாரங்களில் அதிகமாய் எடுத்துப் புகழப்படுகின்றது. இக்கதை ஆன்மாவைப்பற்றியுள்ள மூன்றுவித நோய்களையுமே வேரறுக்க வல்லவர் இறைவன் என்பதைச் சுட்டுக்காட்டுவதாகும்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே"

என்பது திருமந்திரம்.

அப்பர் சுவாமிகளும் தாம்பாடிய திருத்தாண்டகத்தில் "தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னை, திரிபுரங்கள் தீயெழத் திண்சிலைகைக் கொண்டானை" என்று பாடியுள்ளார் இதில் அடியார்களின் நோய் தீர்க்கவல்லான் என்பதன்பின் திரிபுரசங்காரம் கூறியிருக்கும் நயம் உற்றுநோக்கத்தக்கது.

புள்ளிருக்கும் வேளூர் என்பது ஒருதலம். அதற்கு மறுபெயர் வைத்தீஸ்வரன் கோயில். இங்கே எழுந்தருளியுள்ள இறைவன் வைத்தியநாதர் என அழைக்கப் பெறுகிறார். அங்கே சென்று இறைவனை மன அன்போடு வணங்கும் அடியாரது வல்வினைகள் அகன்றுள்ளன ஆயிரம் நாமங்களைச் சொல்லித் தேவர்கள் வணங்கவும், தம்மை என்றும் பிரியாத அடியார்களுக்கு வேறு யாவராலும் கொடுக்க முடியாத பேரின்ப வீட்டைக் கொடுக்க வல்லவரும் தம்மை வணங்குபவர்களது உடலைப் பீடித்த நோயை மாத்திரமல்ல உயிரைப் பீடித்த நோயையும் மாற்ற வல்லவரும், திரிபுரங்கள் எரிக்க போர்க்கோலம் கொண்டவருமாகிய திருப்புள்ளிருக்கும் வைத்தியநாதரை போற்றாதே வீணநாள் போக்கிவிட்டேன்" என அப்பர் மனம்கசிந்து பாடுகின்றார். அதை நாமும் பாடி நல்வழிபெற முயல்வோம்.

"பேராயிரம் பரவி வானோரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா
அடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமுந் தந்திரமும்
மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்றன்னை
திரிபுரங்கள் தீயெழத்திண்
சிலைகைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள்
போக்கினேனே"

## அன்பே சமயத்தின் உயிர்நிலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

ளாய் நின்னையேத்த முழுவதுமே" என்று இறைவனை வேண்டினார். காரைக்காலம்மையார், "இறவாத இன்ப அன்பு" வேண்டினார்.

இறைவன் ஆன்மாக்களாகிய நம்மைத் தினையின் பாகமளவும் பிரிந்திருப்பதில்லை. நரகத்துன்பத்திற் கிடந்து அழுந்தும் ஆன்மாக்களையும், கடவுள் இல்லையென்று கூறும் நாஸ்திகரையும்கூட அவன் விட்டு நீங்குவதில்லை.

"பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்ப
மருளும் துறப்பிலி."

என்பது திருமந்திரம்.

துறப்பிலி — துறத்தல் இல்லாதவர், கைவிடாதவர் ஆன்மாக்கள் பிழைகளைச் செய்தபொழுது, அப்பிழைகள் காரணமாக அவற்றை ஒதுக்கித்தள்ளிவிடாது, அவற்றோடு உடனுறைந்து, அவை தம்மேல் அன்பு செய்யும்வரையும் காத்திருந்து இறைவன் அவற்றுக்கருள் செய்கின்ற பெருங்கருணையும் மணிவாசகப் பெருமானால் பேசப்பட்டுள்ளது.

"பிழைகொண்டொருவிக்
கெடாதன்பு செய்யிற்
பிறவியென்னும்
முழைகொண்டொருவன்
சொல்லாமை நின்றம்பலத்தாடு
முன்னோன்"

என்பது திருக்கோவையார். இங்ஙனம் ஆன்மாக்களைக் கணப்பொழுதும் பிரியாது உள்ளும் புறமும் உறையும் பரம்பொருளைக் கணப்பொழுதும் மறவாது அன்புசெய்யும் மார்க்கமே சைவ சித்தாந்தச் செந்நெறியாகும். —தொடரும்.

# வானொலியில் மருதடி தேர்த் திருவிழா

ஐயா,

சைவத் தமிழ் மக்கள் ஒருமித்துக் கொண்டாடும் பண்டிகைகளுள் புதுவருடம் மிக முக்கியமான ஒன்றாகும். இப் புனித தினத்தை அவர்கள் கடவுள் வழிபாட்டிலேயே அதிகமாகச் செலவிடுவதை நாம் இன்றும் காண்கிறோம்.

புதுவருடத்தன்று தேர்த் திருவிழா நடைபெறும் ஓர் பழம் பெருந்தலமாக மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் விளங்குவதால் இங்கு வழிபாட்டுக்குக்கூடும் பக்தர் கூட்டத்தை எல்லையிட்டுக் கூறவியலாது. நாட்டின் நாலாபுறத்திருந்தும் மருதடி நோக்கி மக்கள் சென்றவண்ண மிருப்பது புதுவருட வழக்கமாகிவிட்டது இத்தகைய பல்வேறு சிறப்புகளும் பொருந்தி விளங்கும் இந்த ஆலயத்தின்கண் நிகழும் தேர்த்திருவிழாவினை இலங்கை வானொலியில் அஞ்சல் செய்ய ஆவன செய்ய வேண்டும். இம்முயற்சியைச் செய்வதனால் இந்நாட்டிலுள்ள சைவத் தமிழ் மக்கள் அனைவரும் பெரிதும் பலன் அடைவார்கள் என்பதிற் சந்தேகம் இல்லை. இத்தகைய பெருவிழாக்களை இலங்கை வானொலி மூலம் அஞ்சல் செய்யக் கூடிய வழிவகைகளைத் தேட -மருதடி ஆலய பரிபாலகர் அவர்களும் மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கமும், உடுவில் பாராளுமன்ற உறுப்பினரும் பெருமுயற்சி எடுக்க வேண்டும் இம்முறை இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டு தொடக்கமாவது மருதடித் தேர்விழா நிகழ்ச்சிகள் வானொலியில் கேட்க ஆவன செய்வது அவர்கள் கடமையாகும்.

கா. இரகுநாதன்
நாயன்மார்கட்டு.

# நல்லைநகர் வயிரவர் பதிகம்

[நவாலியூர் ஸ்ரீ க. சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது]

( முற்றொடர் - 2 )

மாதையோர் கூறுடைய நெற்றிநாட் டத்துமணி
கண்டனே மன்னுயிர்க்கும்
வரமிக்க தேவர்க்கு மளவிலுல கங்கட்கு
மறுவற்ற தேவனென்றே
ஓதைபெறு வேதங்க ளொருகோடி விதமாக
வுறுதிமொழி பலபுகலவும்
ஓராது முன்னெனது நெற்றியி லுதித்தசுதன்
உவனென்று சிவனையிகழும்
பேதைமய லேயுடைய வேதனொரு சென்னியைப்
பேருலக மின்றுமருளப்
பேசுகிர லுகிரினற் கிள்ளியவ ஞணவப்
பிரமக்கெ டுத்ததலைவா
வாதைபுரி தீவினைத் தகைகிள்ளி யென்னையும்
வாழ்விப்பை நல்லைநகர்வாழ்
மாதவர்க கனுகூல வோதுகேத் திரபால
வடுகவயி ரவமூர்த்தியே. 2,

மூவுலகு மரசுபுரி மாவலி யிடங்குறுகி
மூவடியி டந்தருதிநான்
மோனதவ முயல்வனென வாமெனவவ் வாமனன்
மோட்டுருக் கொண்டவுணனின்
மாவலி யடக்கியினி யாரெனைநி கர்ப்பரென
மாமயல்பெ ருக்கியுலகம்
மாழவுறு மிக்கறுவு வேலையவ னைக்குருதி
வாய்வழி யொழுக்கநெரியா
ஏவரும திகசவவ னீருரியெ ழிற்கவச
மேயெனவு டற்கணியுநீ
ஏழையை வருத்துமத வாணவ முரித்தணிதி
யீறில்கண நாதமுதல்வா
மாவிலகி வேறுபட வேலைவிடு மாறுமுகன்
வாசமுறு நல்லைநகர்வாழ்
மாதவர்க் கனுகூல வோதுகேத் திரபால
வடுகவயி ரவமூர்த்தியே. 3

—தொடரும்




பெரியவர்: கேரளத்திலே பைத்தியகாரர் தொகை மிகக் கூடுதலாம். மூன்று பைத்திய வைத்திய சாலைகள் இருக்கின்றனவாம்.

விகடன்: அது முன்னமே தெரிந்த காரியமாச்சே? போதுத் தேர்தல் முடிவுகளே காட்டியிருக்கே!

## உமாபதிசிவாசாரியார் குருபூசை

சித்திரை மீ 5-ந் திகதி (18-4-62) புதன்கிழமை இரவு யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை யாதரவில் நாவலர் மண்டபத்தில் ஷெ குருபூசை நடைபெறும். அன்றிரவு சைவப் பிரசாரகர் திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

## இருமருங்கும் ……

1-ம் பக்கத் தொடர்ச்சி

எழுந்தருளிநோக்கிய திசையை மாற்றி மேற்கு முகமாக அமர்ந்து அற்புதக் காட்சியை அருளினர். அதிகாலையில் பூசை செய்யும் அந்தணர் வழமைபோலக் கோயிற்பணி புரிய வந்தபொழுது விநாயகர் திருவுருவம் மேற்கு நோக்கி மாறியிருப்பதைக்கண்டார். ஆச்சரியப்பட்டார். அச்சங்கொண்டார். திருவருள் என்றுணர்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். பரங்கருணைத் தடங்கடலாகிய பிரணவ சொரூபியின் பெருங்கிருபையை எண்ணி யெண்ணி இறும்பூதெய்தினர், புதையல் கண்டெடுத்தவர் அதை ஏனையோருக்குக் காட்டார். ஆனால் மறையவர் இந்த அற்புதத்தை மறைத்து வைக்க எண்ணவில்லை. தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்றபடி மானிநகர் மக்களுக்கெல்லாம் புதுமையை அறிவித்தார்; பன்னூற்றுக் கணக்காகப் பத்தர்கள்வந்து இது தெய்விகமாமென்று பரவசப்பட்டனர். அந்தணரின் விந்தையோ என்று சிலர் சந்தேகப்பட்டனர். திருவுருவத்தை அந்தணரைக் கொண்டு அசைத்துப் பார்த்தனர். ஆதிதொட்டு அப்படியே இருந்த பான்மையில் மேற்கு நோக்கிய விநாயகத் திருவுருவம் பலமாக அமைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து அற்புதம் என்றுண்மையை உணர்ந்தனர். பொங்கல் பூசை புரிந்தனர்; அதி உத்தம அபிடேகஞ் செய்தனர்; விழாவெடுத்தனர். மருதடிப் பிள்ளையார் சரித்திரமும் தோன்றியது.

யாழ் நாட்டில் கோயில்களிலே முற்பக்கமே கோபுரம் அமைப்பார்கள். முன் அமைக்கப்பெற்றகோபுரம் அப்படியே இருக்க, மேற்கிலும் ஓர் கோபுரம் எழுந்தது. அடியார்களின் ஆனந்த அபிமானம் அவ்வாறிருந்தது. இருமருங்கும் பெருங் கோபுரம் தரும் பெருமையுடைய மருதடிப் பிள்ளையார் யாழ்நாட்டின் திவ்விய தலமாய் ஓங்கியது.

இத்துணைப் பெருமை பொருந்திய இத்தலத்துக்கு இன்னுமொரு பெருமையுண்டு. கொடியேறித திருவிழா நடைபெறுங் காலம் இளந் தென்றற் காலம். தேர்விழா புதுவருடப்பிறப்பன்று நடைபெறுவதால் யாழ்நாட்டு மக்கள் புத்தாண்டு விழாவன்று இரதத்தில் பிரணவப் பெருமான் எழுந்தருளிக் கருணைக் காட்சியளிப்பதைக் கண்டு களிக்கும் பாக்கியத்தைப் பெறுகின்றனர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 13-4-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்